REGD. M. 4642

# திராவிட நாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 30–1–49 | இதழ் 31

## அபத்தக் கூச்சல்

"மண்ணையும் பொன்னையும் பெண்ணையும் மனத்திலும் மதியாத துறவி என்பதற்கறிகுறியாகச் சாமியார் என்ற பட்டஞ் சூட்டிக்கொண்டிருக்கும் ஒருவர் மண்ணும் பொன்னும் மடாதிபதிகள் ஆதிக்கத்தில்தான் இருக்க வேண்டுமென்பதற்காக ஜீவாத்மாவை விடப்போவதாகச் சொல்லுகிறார் என்றால், அவர் இஷ்டப்படி செய்யட்டும் ............இப்பொழுதிருக்கும் மடாதிபதிகள், பண்டார சந்நதிகளின் நிர்வாகத்தில் ஊழல்களும் ஊதாரித்தனங்களும்தான் இருக்கின்றனவே ஒழிய மகத்துவமிருப்பதாக எந்த யோக்கியரும் கூறமுடியாது. வருஷந்தோறும் அநேக ஹிந்துக்கள் இன்னும் மதம்மாறிப்போய்க்கொண்டிருக்கிறார்கள். மடாதிபதிகளால் அதையெல்லாம் தடுத்து மதத்தைப் பலப்படுத்த முடியவில்லை என்றால், இந்த மடாதிபதிகளின் அதிகாரம் குறைந்துவிடுவதால் மாத்திரம் மதத்திற்கு எந்த நஷ்டமும் வந்துவிடப் போவதில்லை. ஆகையால், மடாதிபதிகள் அதிகாரம் குறைவது மதத்திற்கே ஆபத்து என்பது அபத்தக் கூச்சல்."

*தினசரி*
(25—1—49)

## அறிக்கை-எதற்கு? யாருக்கு?

16-ம் பக்கத் தொடர்ச்சி

அதிகாரத்தில் இருப்போர் ஒரு பக்கம் இருக்க, இவர்களை ஆட்டிப் படைக்கும் அந்தஸ்துப் பெற்றுள்ள, காங்கிரஸ் கமிட்டித் தலைவர், வேறு கட்சியினர் நாடாளுவது போலவும், நாட்டிலுள்ள குறைகளை அவர்களுக்கு அறிக்கைமூலம் அறிவித்துப் பரிகாரம் தேடும நிலைதான் தனக்கு இருப்பது போலவும், உழவர்கள் நிலையை எடுத்துக் கூறுவது. உண்மையில் உழவர்களுக்குப் பரிகாரம் கிடைக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு செய்யப்படும் காரியந்தானு? பிரதமராக எவரை நியமிக்கலாம், எவரை மந்திரியாக ஆக்கலாம், மந்திரியாக இருப்பவரை எப்படித் தொலைக்கலாம், என்றெல்லாம், உறங்கும் நேரத்திலும் உள்ளத்தில் கள்ளச் சிந்தையோடு, திட்டமிட்டுக் கொண்டு இருப்பதே தனது முக்கிய பணியாகக் கொண்டிருக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜர், அறிக்கை நீட்டுகிறார் உழவர்கள் நிலை குறித்து!

சர்க்கார் ஏற்படுத்திய பஞ்சாயத்தின் தீர்ப்புப்படி கூலி கொடுக்க மிராஸ்தாரர்கள் மறுக்கிறார்களென்றும், மிராசுதாரருக்கும் உழவர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை உடைக்க மிராஸ்தாரர்கள் பலமுறைகளை எடுப்பதாகவும், இரண்டு மாத மாகப் பிரதமர் தஞ்சையில் தங்கி இருந்தும் உருவான பலன் கிட்டவில்லை என்றும், இதனால் சர்க்கார் மதிப்புக்குக் கேடு விளையுமென்றும், சர்க்காரும் இதனை முன் யோசனையுடனே, ஒருதீர்மானத்துடனே நடத்திக் கொளவதாகத் தெரியவில்லை என்றும் காமராஜர் பிரலாபிக்கிறார்.

காமராஜர் யார்? பிரதமர் யார்? இருவருக்கும் உள்ள தொடர்பு என்ன? இருவரும் ஒரே கட்சியினர் தானு? வெவ்வேறு கட்சியினரா? காமராஜர் கூறினுல், பிரதமர், தட்டி நடந்து கொள்வாரா? காமராஜருக்குத்தான் உழவர்களிடம் அதிக அக்கறை, பிரதமருக்கு அவர்களிடம் அதிகக் கோபம் என்று பொருள் கொள்வதா? மிராஸ்தாரரென்றாலே காமராஜருக்குவேம்பு பிரதமருக்கு அவர்கள் கரும்பு என்று தீர்மானிப்பதா? அறிக்கைவிடுகின்ற அந்தஸ்துத்தான் காமராஜருக்குஇருப்பதா? அல்லது மேலும் உண்டா அதிகாரம் அவருக்கு?

உழவருக்கு நலம் தேடுவதுதான் காமராஜரின் அந்தரங்க நோக்கமானுல், பிரதமரைச்சுட்டிப்பேசக் காரணமென்ன? உழவர்களின் துன்பத்தைத் துடைக்க இதுவரை காமராஜரோ, அவர் தயவால் ஆளவந்தாரான பிரதமரோ முன்[illegible] இருக்கிறார்களா? சட்டசப[illegible] கட்சித் தலைவர் தேர்தல் நெருங்க நெருங்கக் காமராஜருக்குப் பாட்டாளிகள்மீது கருணை அதிகரிக்கிறது போலும்!

காமராஜர் கருதுவது போல, காமராஜரை நாடு தெரிந்து கொள்ளாமல் இல்லை. அரசியல், காமராஜர் போன்றார் கை வரிசைக் காட்டும் அளவிற்கும், ஓமந்தூரார் போன்றார் ஆளும்தகுதிபெறும் அளவிற்கும், குருடனுக்குக் குருடன் வழி காட்டுவது என்பார்களே அது போன்ற, பொருத்தமற்றாரின் புகலிடமாகப் போய்விட்டிருக்கிறது. இது ஜனநாயகமல்ல, முதல்தர பதவி வேட்டை! அறிக்கை—எதற்கு? யாருக்கு? என்பதை,நமக்கல்ல, தன் நெஞ்சுக்கே சமாதானம் கூறிக் கொள்ளட்டும் காமராஜர்.

✻

4-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்கலாம்? ஆம், இன்றைக்கும் புழுப்பூச்சு, நத்தை, தவளை, ஓணான் பல்லி, பறவை, மிருகாதிகள் பலவும் யாதொருகருவிகளுமின்றி, வாழ்கின்றன. அவைகளைப்போல் வாழவேண்டுமென்று கருதுவோர் இன்றே தற்காலக் கருவிகளைத் தவிர்த்துவிட்டு வாழ ஆரம்பிக்கலாம். ஆனல் மற்ற உலகம் ஒப்புமோ வென்பதுதான் சந்தேகம்!! ஆதலால் யந்திரத்தினுல் நூற்பதாலும் நெய்வதாலும் மில் நூல்துணி கேடென்றும், ராட்டினநூல் துணியே மேலென்றும் கருதுகிறவர்கள் இதனை யோசிக்க வேண்டுகிறோம்.

ஆனல் இவ்வளவு எந்திர அனுகூலங்களும், சவகாசமும் ஏற்பட்டிருந்தும் ஏன் உலகில் துக்கமும், துன்பமும் வறுமையும், பிணியும் சண்டையும், போரும் வழக்கும், வில்லங்கங்களும் அதிகரித்துவருகின்றன என்று கேட்கலாம். அதற்குக் காரணம் பொருளாதாரச் சுரண்டல்முறை; அதற்கு மாற்று மருந்துதான் சமதர்மம்.

✻

15-ம் பக்கத் தொடர்ச்சி

சன், கே. கண்ணப்பன், கலைச்செல்வன், ஜி. மாரியப்பன், ஏ. ஜி. சம்பத்குமார், டி. சிவஞானம், பாப்பம்மாள், சி. எஸ். திராவிடமணி, வி. லாரன்ஸ், ஆர். ஜி. ஆர். வேந்தன், எஸ். கோவிந்தசாமி, வி. பேட்ரிக், எல். தேவசகாயம், எம். வேலுசாமி, கே. பி. சந்திரன்.

### இரண்டு வாரம்

9—9—48-ந் தேதி மறியல் செய்யப் புறப்பட்ட தோழர்களையும், மறியல் செய்துவிட்டுப் பாசறைக்குத் திரும்பிய தோழர்களையும் போலீசார் கைது செய்து, உத்தரவின்றி ஊர்வலம் நடத்தியதாகக் குற்றஞ் சாட்டி, ஒரு வாரம் சிறை வாழ்வை வாங்கித் தந்தனர். அந்தத் தோழர்கள், இவர்கள்தான்!—

பி. எல். ஆவேசமுத்து, கே. சி. செல்லப்பழம், எம். கோவிந்தசாமி, எ. மாரியப்பன், எம். சங்கிலி, சி. வி. ராஜன், எல். எம். மாரியப்பன், கே. முத்தையா, ஜி. கோதண்டம், எ. இராமசாமி, எம். பி. சகாதேவன், ஆர். டேவிட், வி. பாலன், ஆர். எல். செங்கராஜ், சி. ஏ. விஸ்வநாதன், கே. எம். வேணு

### இரண்டு வாரம்

10—9-48-ல், இந்தியை எதிர்த்த தொண்டர்கள் 11 பேரைக் கைது செய்து, வழக்கமான குற்றத்தைக் காட்டி வழக்கமான காவல் தண்டனையை வாங்கித் தந்தனர். அந்தத் தோழர்கள் இவர்கள்தான். கே. காளிதாஸ், பி. சேமன், பி. ரங்கபாஷ்யம், ஏ. சுப்ரமணியம், வி. நடேசன், எம். வேதாசலம், எல். ரங்கராஜ், சி. கேசவலு, எம். சித்திரை, பி.கே. முத்துகிருஷ்ணன், ஜி.வேணுகோபால்.

(5-ம் பக்கம் பார்க்க)

### முகவரி மாற்றம்

தோழர் நெடுஞ்செழியன் தம் இருப்பிடத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றிக் கொண்டுள்ளார்.

5 D ஒயிட்ஹால், 7 வது தெரு
ஜூலைமேடு, கோடம்பாக்கம்,
சென்னை.

# ★ இயந்திர உலக முன்னேற்றம் ★

[சிங்காரவேலு]

வறுமையை ஒழிப்பதற்கு யந்திரத்தால் முடியுமா, அல்லது கைராட்டினத்தால் முடியுமா? என்ற சங்கையைக் குறித்துக் கிளம்பிய பிரச்சினை, தற்போது இந்தியாவில் முக்கியமாகக் கருதப்படுகிறதை நாம் அறிவோம். இப்பிரச்சினையின் ஒரு பிரசாரமே இன்று நம் நாட்டில் கதர் பிரசாரமாகவும் இருந்துவருகிறது. இந்தப்பிரச்சினை முதல் முதல் காந்தியாரால் எழுந்ததல்ல. அவருக்கு முன்னரே மேல்நாட்டுத் துறவி டால்ஸ்டாய் என்ற பெரியார், யந்திரங்கள் மனித நன்மைக்கு உதவாதென வாதித்து வந்திருக்கிறார். இவர் கூட்டத்தைச் சேர்ந்த சிலரும், இந்த வாதத்தைப் பகிரங்கப்படுத்தி வந்திருக்கின்றனர். அவர்களில் காந்தியார் ஒருவர். நமது காந்தியார், கைராட்டினத்தைக் கொண்டு, உலக துக்கத்தைப் போக்கலாமென அபிப்பிராயங் கொண்டிருந்தார் என்றாலும் பொதுவாக யந்திரங்களால் தற்கால வறுமையும் துன்பமும் உண்டாகியிருப்பதாக அவர் அபிப்பிராயம் போலும்! ஆனால் அவர் பிற்போக்கை அனுசரித்து வந்ததால் உலக பொருளாதார காரணங்களை உணராமலே இந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார். நமது காந்தியாருக்கு ராமராஜ்யமும் பாண்டவ ராஜ்யமும் சிறந்ததாகத் தோன்றியதால் இவ்வித பிற்போக்கான அபிப்பிராயம் அவர் கொண்டிருந்தது ஆச்சரியமல்ல! டால்ஸ்டாய்க்கும் தற்கால நாகரிகம் பிடிக்காது. அதனாலேயே அவர் பெரியார் எனக் கருதப்பட்டார். அவரும் பண்டைக் கால வாழ்வே சிறந்ததாகப் பல நூல்களில் வரைந்துள்ளார். எல்லாச் சம்பத்துகளையும் விட்டு விட்டு துறவி வேஷம் பூண்டவர்கள் எந்த அபிப்பிராயமும் கொள்ளலாம். அவரைப் பின்பற்றிய காந்தியாரும் இந்த மனப்பான்மையில் இருந்துகொண்டு புராதன வாழ்வே உயர்ந்தது என்று எண்ணியதும் ஆச்சரியமல்ல. யார் யார் முற்காலத்து நடையுடை பாவனைகளை ஆதரித்து வாதிக்கின்றனரோ அவர்கள் யாவரும் தற்கால நாகரீக வாழ்வைக் கண்டிக்காமல் இருக்கமாட்டார்கள். இந்தப் பிற்போக்கு மனப்பான்மையின் தோற்றமே தற்கால யந்திரங்களின்மேல் இவர்கள் வைத்துள்ள கடூரமான வெறுப்பு என அறிக.

## மிருகத்தனமான காலமெது?

எந்த யந்திரமும் இல்லாத காலம் மிருகத்தனமான காலமாகும். உயிர்களில் மனிதன் ஒருவன்தான் உலகில் முதல் முதலில் யந்திரங்களைக் கண்டுபிடித்து தன் உபயோகத்திற்கு அவைகளைக் கையாண்டு வந்தவன். மனிதன் ஆதியில் உலகில் அவதரித்த போது அவனுக்கு எந்த ஆயுதமும் இருந்திருக்காது. பூர்வகால மனித வாழ்வைப் படித்தவர்கள் (Anthiopologists) மனிதன் மிருக சந்ததியாரை விட்டுப் பிரிந்த காலையில் வாலில்லாக் குரங்குகளைப் போலவே நிராயுதபாணியாய் இருந்திருக்க வேண்டுமென்று எண்ணுகின்றார்கள். ஆயுதமில்லாமல் அவன் இருந்திருப்பானேயாகில் மரத்திலிருந்து தரையில் இறங்கி வந்ததும் அந்தக் கால துஷ்ட மிருகங்களாகிய புலி சிங்கம் இன்னும் பலகொடிய மிருகங்களால் நாசமாகப்போய் இருக்கவேண்டும். ஆனால் அவன் சற்றுநிமிர்ந்து நடக்க ஆரம்பிக்கவும் கைகளும் கால்களும் மரத்தைத் தாவுதலை விட்டு ஆயுதங்களைக் கையாடவும், ஓடவும் தனக்கு இடங்கொடுத்தது. அவன் ஆதியில் கையாண்டு வந்த ஆயுதங்கள் படிப்படியாய்ப் பூமியில் புதைந்து கிடந்தவைகளை உலக கண்காட்சி சாலைகளில் எடுத்து வைத்திருப்பதினால் காணலாம். எலும்புக் கூர்முனைகள், எலும்பு வாள், கூரான கற்கள் இவைகளே அவன் ஆதி ஆயுதங்களாகும். இந்த அற்ப ஆயுதங்களால் ஆதி மனிதன் மிருக பயத்தினின்று மீண்டு மிருகங்களையும் எதிர்த்துக் கொல்லத் துணிவு பெற்றான். ஆதலின் ஆதி ஆயுதங்கள்தான் ஆதி மனித வாழ்வுக்கு இன்றியமையாதனவாக இருந்தன.

இதன் பிறகு அநேக நூற்றாண்டுகள் சென்று அம்பையும் வில்லையுங் கண்டுபிடித்தான், எலும்புகளைக் கூராக்கி வில்லில் எய்தான். அதன் பிறகே கற்களைக் கூராக்கி எய்தான். அதன் பிறகு இரும்புத் துண்டுகளைக் கூராக்கினான் இவைகளுடன் கலப்பையையும் கண்டுபிடித்தான். உழுது பயிர் செய்யச் சக்தி பெற்றான். கலப்பையால் திடீரென ஒரு பெருத்த சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். கைகளால் புரண்டி இரண்டொரு அடி நிலத்தை விதைப்பது போய், இரண்டொரு காணியை (ஏக்கர்) நிலங்களை உழுது பயிரிட ஆரம்பித்தான். இது முதல், ஆதி மனிதனுக்கு நினைக்கவும் யோசிக்கவும் சாவகாசம் கிடைக்கப்பெற்றான். வீடுகளைக் கட்டவும் மரங்களை வெட்டவும் கற்களை உடைக்கவும், உளி, கத்தி, வாள் முதலிய ஆயுதங்களை உண்டாக்கிக் கொண்டான். வீட்டைப் பெருக்கவும் முறம், துடைப்பம் முதலிய கருவிகளைக் கண்டுபிடித்தான். நிலங்களைச் சுத்திசெய்ய வரப்புப்போட மண்வெட்டியைக் கண்டுபிடித்தான். குளத்தில் தண்ணீர் எடுக்கவும் சமையல் செய்யவும் மட்பாண்டங்கள் கற்பாண்டங்களையும் கண்டு பிடித்தான். இவைகளோடு நெருப்பின் உபயோகத்தையும் தெரிந்து கொண்டவனாய், கல் அடுப்புகளையும் வெளிச்சங் கொடுக்கத் தீவட்டிகளையும், வீடுகளில் அகல் தீவட்டிகளையும் கண்டுபிடிக்க முயன்றான். நிர்வாணமாக வந்த மனிதன் மிருகத்தோல்களையே ஆதியில் தன் உபயோகத்திற்குப் பதம் செய்து போர்த்திக்கொள்ள சக்தி பெற்றான். தோல்களின் மயிரைக் கொண்டு எலும்பு ஊசிகளால் மயிரைப் பின்ன ஆரம்பித்தான். பஞ்சணம் பட்டு இவைகளைக் கதராலும் ராட்டினத்தாலும் நூற்கவும் நெய்யவும் ஆரம்பித்தான். இவ்விதமாக ஆதிமனிதன் சிற்சில ஆயுதங்களைக் கண்டுபிடித்த பிறகே தனது வாழ்வையும் உயிரையும் காப்பாற்றிக் கொண்டு வந்ததோடு, ஆடவும் பாடவும் வேதாந்தம் பேசவும்; கடவுள்களாகிய ஈசன், பிரமன், மாயோன் முதலியோரை கற்பிக்கவும் சாவகாசம் பெற்றான் என அறிக.

## ஆதி முதாதைகளுக்கு இந்த ஆயுதங்கள் இல்லாமற் போனால்?

நமது ஆதி மூதாதைகளுக்குஇந்த ஆயுதங்களும் யந்திரங்களும் இல்லாமற்போனால், ஆயுதங்கள் வேண்டாமென்று சொல்லக் காந்தியார் எங்கு

இருப்பார் என்று கேட்கின்றோம், மரங்களில் தொத்திக்கொண்டு வந்ததைப் பிடித்துத் தின்றுகொண்டு கண்ட மிருகங்களின் வாயில் அகப்பட்டுக்கொண்டு காட்டு மிருகங்களோடு ஓர் மிருகமாகத்தான் நாம் எல்லோரும் இருக்கவேண்டும்! அல்லது வீடுவாசலில்லாக் காட்டுமிராண்டிகளாகவே இருக்கவேண்டும்! அல்லது குறவர், கள்ளர்களைப்போலத்தான் நாமும் நடுநிசி சஞ்சாரமனிதராக இருக்கவேண்டும்!! ஆதி மனிதன் ஆற்றைத்தாண்ட ஓடங்களைக் கண்டு பிடித்தான். அதிலிருந்து ஆழிகளைத் தாண்டப் புகைக்கப்பல்கள் வந்தன. காடு வனாந்திரங்களைத் தாண்ட பல்லக்கையும், வண்டியையும் கண்டுபிடித்தான். அதிலிருந்து ரெயில் வண்டிகளும் ஆகாயவிமானங்களும் உண்டாயின. ஆயுதங்கள் இல்லாமலா இராமன் இராவணாதிகளை அழித்தான் என்று கேட்கிறோம்? அம்பு, வில் இல்லாமலா பாண்டவர் அஸ்தினாபுரியில் ஆண்டார்கள் என்று கேட்கிறோம்?

அந்தந்தக்கால மனித வாழ்வுக்கு வேண்டிய ஆயுதங்கள் அந்தக்காலத்தில் இல்லாமலா இருந்தன?

சர்க்காவிலிருந்து (ராட்டினத்திலிருந்துதான்) நூல் நூற்கும் எந்திரங்கள் வந்தன. பல்லக்கு, கட்டை வண்டி, ரதங்களிலிருந்து டிராம் வண்டிகளும், பஸ்களும், ரயில்வண்டிகளும் வந்தன. கொப்பூசியிலிருந்து, சிங்கர்ஸ் தைக்கும் மெஷின் (Singers Sewing Machines) வந்திருக்கின்றன. பண்டைக் காலக் கலப்பற்ற (Simple) எந்திரங்களிலிருந்து, தற்கால கலப்புள்ள (Complex) எந்திரங்கள் தோன்றியுள்ளன. பண்டைக்கால எந்திரங்கள் இல்லாமல், இராமலட்சுமணரும் ஜீவித்திருக்க முடியாது. சூர்ப்பநகை அப்போதே வாயில் போட்டுக்கொண்டிருப்பாள். தற்கால எந்திரங்கள் இல்லாமல், காந்தியாரும் வாழ்ந்திருக்கமுடியாது. இந்த நிமிஷத்தில், பஞ்சை விளைவிக்க வேண்டிய கருவிகளையும், நூல் நூற்க வேண்டிய கருவிகளையும், சபர்மதி ஆஸ்ரமத்தைக் கட்டுவித்த எந்திரங்களையும் வெள்ளை ஆட்டுப்பாலைக் கொள்ளும் பாத்திரங்களையும் உலகிலிருந்து எடுத்துவிடுவோமானால், எங்கே நமது தலைவர்கள் பிழைப்பதைப்பார்ப்போம்! ஆனால் காந்தியாருக்கு வேண்டிய பொருள்களைச் செய்யும் எந்திரங்கள், லேசானவை. பலகோடி பல்லாயிரவர்களுக்கு வேண்டிய பொருள்களைச் செய்யும் ஆயுதங்கள் பலமானவை. இதுதான் வித்தியாசம்.

## எந்திரங்கள் பலக்க பலக்க கல்வியும் கேள்வியும் வளரலாயிற்று

எந்திரங்கள் பலக்க பலக்க கல்வியும் கேள்வியும் நாகரிகமும் பலத்து வந்திருப்பதைக் காணலாம். கத்தியும், கலப்பையும், முறமும், துடைப்பமும் இல்லாத காலம் மிருகத்தன்மைக்குமேலான காலமென்று எண்ண இடமில்லை. மேற்கண்ட ஆயுதங்கள் படைக்கப்பெற்ற பின்னரே, மனிதன் நாகரிகப்படியை எட்டிப்பிடித்திருக்கவேண்டும். பல்லக்கு, இரதம் முதலிய சொற்ப கருவிகள் உண்டானகாலம் அதற்கு முற்காலத்தை விடச்சற்று சிறந்ததாகவே சொல்ல வேண்டும். கைகளால் செய்த தோல் ஆடைகளைவிடச் சக்கரத்தாலும் ராட்டினத்தாலும் செய்த ஆடைகள் உயர்ந்திருப்பதுபோலவே, அவைகளை அணிவோரின் நாகரிகங்களும் உயர்வு அடைந்திருப்பதாகக் காணலாம். தோல் ஆடை போர்த்திக்கொண்டிருக்கும் எஸ்கிமோ (Esquemo)களையும், ராட்டினத்தால் நூற்ற நூலைக்கொண்டு நெய்த ஆடைகளைத் தரித்திருக்கும் சென்னைவாசியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இவ்விருவர் அடைந்துள்ள கல்வி,கேள்வி,நாகரிக முன்னேற்றங்கள் வெளியாகும். அரை ஆடை தரித்த வில்லியனையும், காஞ்சிபுரம் வேஷ்டியை உடுத்தும் தமிழனையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவரவர்கள் அடைந்துள்ள நாகரிகம் நன்கு விளங்கும். எந்திரங்கள் வழங்காத காட்டுமிராண்டிகளையும், எந்திரங்களைப்பூரணமாக உபயோகிக்கும் தற்காலக்கூட்டத்தாரையும் ஒத்திட்டுப் பார்த்தாலும் நாகரிக வித்தியாசம் விளங்காமற் போகாது. ஆதலின் ஆதிமுதல் மனிதன் படிப்படியாக நாகரிகத்தை அடைந்துவந்தது படிப்படியாக உயர்ந்த எந்திரங்களை உபயோகித்த காரணத்தாலதானென அறிக. மனித உயர்தர வாழ்வுக்கும் கல்வி, கேள்வி, நாகரிகத்திற்கும் அவசியமானவை யாதெனில், மனிதன் உபயோகித்துவரும் ஆயுதயந்திர[illegible] எந்தெந்த ஆயுதங்களையும் யந்திரங்களையும் உபயோகத்தில் கொண்டுவந்தானோ, அவைகளுக்குத்தகுந்த நாகரிகத்தைத்தான் அவனும் அடைந்தான்.

## யந்திரங்களால் உலகம் கெட்டுப் போயிற்றென்று சொல்வது பொருந்துமா?

இந்தப் படித்தரத்தில், பல்லக்கு, வண்டி, குதிரை, மாடு, பசு, கலப்பை முதலியவைகளைக்கையாண்ட காலம் ராமலட்சுமண காலமாகும். மகாபாரத காலமும் இந்தக் காலத்திற்கு அடுத்தே இருந்தது. புகைவண்டி, புகைக்கப்பல், நெசவு தொழிற்சாலைகள், இவைகளை உபயோகிக்கும்காலம் நமது காலமேயாகும். இவ்விதமாக, யந்திரங்களின் அபிவிருத்தியால், மனிதன் படிப்படியாகத் தற்கால நாகரிகத்தை அடையப் பெற்றான். அறிவு படிப்படியாக விளங்கவும், எந்திரங்களால் அனுகூலமடைந்தான். போக்குவரத்துச் சாதனங்கள் அதிகரிக்கவும், சிறு கிராமங்களாய் இருந்துவந்த சமூக இருப்பிடங்களும் பட்டினங்களாகவும், நகரங்களாகவும், அவைகளில் பல்லாயிர மக்கள் வாழவும், எந்திரங்கள் அனுகூலமாக இருந்து வந்தன. இன்று எந்த எந்திரங்களும் வேண்டாமென்போர், தங்கள் வீடுவாசல்களையும், ஆடை ஆபரணங்களையும், உணவுக்குவேண்டிய பொருள்களையும் நாடு நகரங்களையும், விட்டுவிட்டு, மிருகாதிகள் வாழும் காட்டிற் சென்று, கந்த மூலங்களைத் தின்றுகொண்டு, குகைகளிலும் விருட்சங்களிலும் வாசம் செய்யவேண்டி வரும். இந்த வாழ்வுக்கு, சம்மதிப்பரா? எந்திரங்களால் உண்டாகும் அனுகூலங்களையும், சலுகைகளையும், அனுபவித்துக்கொண்டு எந்திரங்களால் உலகம்கெட்டுப்போயிற்றென்று கூறுவது பகுத்தறிவுடைய மக்களுக்கு அழகல்லவென்றே நாம் கூறுவோம். இன்றைய தினம் துடைப்பம், கலப்பை, மண்வெட்டி, கத்தி, அரிவாள், ஊசி, பானைசட்டி, தறி, வண்டி, விளக்கு, வீடு, வாசல், ரயில், தந்தி, தபால், கப்பல், மோட்டார், படகு, மின்சார எந்திரங்கள், புகை எந்திரங்கள், டெலிபோன், ஆகாயத் தந்தி முதலிய கருவிகளை உலகிலிருந்து எடுத்துவிடுவோமானால் உலகம் என்னாகுமென்று சிந்தித்தீர்களா? இவைகள் இல்லாமல் உயிர்கள் கோடானகோடி வருஷம ஜீவித்து வரவில்லையாவென்று

(2-ம்பக்கம் பார்க்க)

## ஆளவந்தார்களுக்கு அர்ப்பணம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

### ஒரு வாரம்.

11—9—48-ல் சென்னையில் மறியல் செய்த தொண்டர்கள், கே. ரெங்கநாதன், எம். அருணாசலம், ஆர். செல்வராஜ், பி. வி. நாகப்பன், எம். பச்சையப்பன், ஆகிய ஐவருக்கும் ஒரு வாரச் சிறை தண்டனை அளிக்கப்பட்டது.

### இரண்டு வாரம்

7—9—48-ல் ஆலந்தூருக்குச் சென்ற மந்திரி மாதவமேனனுக்குக் கருப்புக்கொடி வரவேற்பு அளித்ததற்காக, கழகத் தோழர்கள் மணவாளன், கன்னியப்பன், வேலை நகர் கணேசன் ஆகிய மூவருக்கும், விசாரணை செய்த நீதிபதி 2 வார கடுங்காவல் தண்டனையை அளித்தார். முகமலர்ச்சியுடன் சிறை புக்கனர் தோழர்கள்.

### சில மணி நேரம்

10-9-48ல் கல்வி அமைச்சர் காவேரிப்பட்டினம் சென்றார் அவரை பகிஷ்கரிக்க இருந்த தோழர்கள், எம். சி. இராமமூர்த்தி, வி. என். இராஜராம், என்.எம்.என். இராமுலு, செ. சீனிவாசன், வே. பழனிச்சாமி, தசரதன், வச்சிரம், கோவிந்தசாமி, வெங்கிடராமன், மாதவன் ஆகியவர்களை, நடுப்பகல் 3 மணிக்குக் கைது செய்து மாலை 5 மணி வரையில் போலீசு லாக்கப்பில் வைக்கப்பட்டிருந்து, விடுதலை செய்யப்பட்டனர்.

10-9-48-ல் முதலமைச்சர் ஓமந்தூராரும், முத்துரங்க முதலியாரும் ஓ. வி. அளகேசனும், செங்கல்பட்டிற்கு வந்திருந்து பொதுக் கூட்டத்தில் பேசினர். அதுசமயம் கழகத் தோழர்கள் கருப்புக் கொடி பிடித்து 'தமிழ் வாழ்க' 'ஹிந்தி ஒழிக' என்று மிக மிக அமைதியாக, முழக்கம் செய்தனர். இவ்வாறு இருமுறை முழக்கம் எழுப்பிய தோழர்களை போலீசார் கைது செய்துகொண்டு சென்றனர். பிரதமர் முடிவாகப் பேசுகின்றபொழுது காஞ்சிபுரம் தோழர் எம். சுப்பிரமணியம், தங்களது அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக ஒரு கருப்புக் கொடியைப்பிரதமரிடம்கொடுத்தார். அவரும் கைது செய்யப்பட்டார். பிரதமரின் கட்டளைப்படி இரவு 11-30 மணிக்கு, கைது செய்யப்பட்ட 28 தோழர்களும் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் பெயர்கள் கீழே தரப்படுகிறது:— டி. கோவிந்தராஜன், எஸ். பாண்டியன், எம். எம். இப்ராகிர், வி. நடராஜன், ஜி. பக்தவத்சலு, ஜி. ஹென்றி, பி. பலராமன், பி. வி. இராமதாஸ், இ. பலராமன், எல். நாராயணன், சி. மூர்த்தி, என். கிருஷ்ணசாமி. ஆர். நாகரத்தினம். ஏ. வெங்கிடேசன், நாராயணசாமி, ஏ. ஆர். கன்னியப்பன். எம் வி. எதிராஜ், சி. கண்ணன், முதலியவர்கள் செங்கற்பட்டுவாசிகள். டி. என். வேதாசலம்—திருக்கழுக்குன்றம். வி. திருநாவுக்கரசு, எம். சம்பந்தம், கே. ஆறுமுகம்—தேல்முகிப்பேட்டை. மா. குப்புசாமி, இ. தேவசேனாபதி, வே. சரவணப்பெருமாள், சு. இராஜமாணிக்கம்—மாணும்பதி

### 2 வாரம்

13-9-48-ல் சென்னையில் மறியல் செய்த தொண்டர்கள் மா. ஆதிமூலம், கே. டி. ஜெயராமன், கோ. துரைக்காலன், ப. கன்னியப்பன் ஆகிய தோழர்களை விசாரணை செய்து, 2-வாரக் காவல் தண்டனை அளித்தார் நீதிபதி.

### ஒருநாள் சிறை

15—9—48 அடையாளமறியலை ஒட்டி கிருஷ்ணகிரியில் கைதுசெய்யப்பட்ட தோழர்கள் ம. ர. நெடுமாறன், டி. எஸ். பரமசிவம், சுப்பராமன், துரைசாமி, தேவராஜி, டி. மாணிக்கம், தங்கவேலு, கோவிந்சாமி, முனிசாமி, சின்னசாமி, வெங்கிடராமன் ஆகியவர்களுக்கு, ஒருநாள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.

### நாலுநாள் சிறை

15—9—48-ல் சாத்தூரில் மறியல் செய்து கைதான தோழர்கள் பா. இராஜாமணி, பி. காசிராஜன், சுப்பாராஜ், எட்வர்ட், என். தங்கராஜன், பி. துரையப்பன், விசுவாசம், மாணவர் இதயஜு ஆகிய எண்மருக்கும், நான்குநாள் காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

### ஒருவார கடினகாவல்

அமைச்சர் பக்தவத்சலத்துக்கு 12—9—48-ல் மதுரையில் கருப்புக்கொடி காட்டியதற்காக கைது செய்யப்பட்ட தோழர்கள் கே. எஸ். சிவாஜ், எம். கந்தசாமி, அன்பானந்தன், மணி, சந்திரசேகரன், பொ. தங்கையா, ஆண்டி, முனிஆண்டி, ராஜா ஆகிய ஒன்பது நபர்களுக்கு ஒருவாரம் கடினகாவல் தரப்பட்டது.

### பத்துநாள் கடினகாவல்

15—9—48-ல் மதுரையில் மறியலில் கலந்துகொண்ட தோழர்கள், அ. பழனிச்சாமி, எஸ். ரெத்தினசபாபதி, க. சுப்பையா, அ. ராசு, வி. ராசு, எஸ். சேவலப்பன், எஸ். முத்தையா, கே. எஸ். கலியபெருமாள், ஜி. துரைராஜ், பி. ரதினம், அ சீனிவாசன. ம. ம. துரைப்பாண்டி, கே. எஸ். இராசமான், வி. கே. இராஜ, டி. இ. முத்து, டி. ஆசீர்வாதம், எம. சீத்தாராமன், எம. சங்கிலி, ஜி. தங்கையா, எம். மூக்கையா, ஏ. எஸ். மணி ஆகிய 21 நபர்களுக்கும 10 நாள் கடின காவல்தண்டனை தரப்பட்டது.

### ஒரு வாரம்

15—9—48-ல், திருவண்ணாமலையில், அடையாள மறியலில் ஈடுபட்ட தோழர்கள் 33 பேர்களுக்கும் ஒரு வாரம காவல் தண்டனை அளிககப்பட்டது.

தொண்டர்கள் விவரம்:—

முதற்குழு:— பா. வையாபுரி (காபடன்) ஜி. மாணிக்கம், என். முத்துசாமி, எஸ். சண்முகம், எம். கோபால், வி. கிருஷ்ணசாமி, (ராசிபுரம்) எம். லோகநாதன், எஸ். மாரிமுத்து, எஸ். கண்ணன், என். ரங்கநாதன்.

இரண்டாம் குழு:— ஜி. பு. தியாகராசன், (காப்டன) எம். வெங்கட்டராமன், டி, அண்ணாமலை, ஆர். கண்ணன், எம. சுந்தரம, டி. ஏ. சீனன், எம. வேலுசாமி, வி. அண்ணாமலை.

மூன்றாவது குழு:— கணபதி, பி. வரதன், எஸ். ஜெயராமன், கே. எம். பாலகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன்.

நான்காவது குழு:— வே. வேங்கப்பன், எம். திருஞானம்.

ஐந்தாவது குழு:— கோபால், (காபடன்) சீதாராமன், கிருட்டின மூர்த்தி, இப்ராஹிம்.

ஆறாவது குழு:— எச். எஸ். சண்முகம், எஸ். திருமலை, எம். கண்ணன், ரங்சாமி.

(12-ம் பக்கம் பார்க்க)

# ★ பொங்கல் விருந்து ★

தமிழனின் தனிவிழா பொங்கல். மூடநம்பிக்கை துளியும் கலவாதது. ஓராண்டு உழைப்பின் விளைவைக் கண்டு பூரிப்படைந்து, அதனால் தான் பெற்ற இன்பத்தைப் பலரும் பெறவேண்டும் என்னும் நல்ல நோக்கத்தோடு, உழவன், தன் உற்றார் உறவினரோடு, உண்டுகளித்து, புத்தாடை உடுத்தி, உழவுக்குப் பெரிதும் துணைபுரிந்த கால்நடைகளுக்கும் திருநாளைக்கொண்டாடி, மகிழ்ந்து இன்பத்தில் திளைக்கும் இணையற்ற பெருநாள் பொங்கலாகும். இத்தகு விழாவைத் தமிழருக்குத் தந்தவர் காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்களாகும். தமிழன் ஒருவன் மட்டும் தரணியில் இருக்கும் நிலை ஏற்படினும், அவன் உள்ளளவும், அத்தமிழ் மூதறிஞரை மறந்துவாழான் என்பது முக்காலும் உண்மையாகும்.

அம்மறத்தமிழர், உயிரோடு இருந்தகாலை, சென்னையில் எங்கோ ஓர் மூலையில் துவக்கிவைத்த தமிழர் விழா, இன்று தமிழர் தரணியில், நகரங்கள், கிராமங்கள், பட்டிதொட்டிகளனைத்திலும் பொதுவாகத் தமிழர்களாலும், குறிப்பாக நமது கழகத்தவராலும், வெகு சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழர் திருநாளுக்குத் தனிச் சிறப்பைக் கொடுத்து தமிழர் உவந்து ஏற்றுக்கொள்ளும் முறையில், பொங்கல் நாளுக்குப் புதுச் செல்வாக்கைத் தேடித்தந்த பெருமை முழுதும் நமது தலைவர் பெரியார் அவர்களையே சார்ந்ததாகும் என்பது மிகையாகாது.

பெரியதோர் நிலப்பரப்பு, நூற்றுக் கணக்கான மக்களை உள்ளடக்கக்கூடிய அழகிய பந்தல், பகலைப் பொய்யாக்கும் பிரகாசமான மின்சார விளக்குகள், மக்களை ஒன்று திரட்டுவதற்கு ஏதுவான விளம்பரங்கள், இவ்வளவு வசதியுடன் இவ்வாண்டும் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது காஞ்சிபுரத்தை அடுத்துள்ள திருவத்திபுரத்தில்.

## 19—1—49

தோழர் சி. வே. சுப்பராயன் தலைமையில் இவ்வாண்டு பொங்கல் விழாத் துவக்கப்பட்டது. பெரியார் இராமசாமி அறிவுரை புகன்றார். தமிழர்க்கு இழிவையும், ஆரியருக்கு உயர்வையும் கொடுக்கும் தீபாவளி பண்டிகையின் உட்பொருளை நன்கு விளக்கிக்காட்டி, தமிழர்கள் தீபாவளி கொண்டாடுவது ஆரியர் புகுத்திய அடிமைவாழ்வைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வதாகும் என்று எடுத்துக்கூறி, தமிழருக்குக் கேடுபயக்கும் அத்தீயபண்டிகையைக் கைவிட்டுவிடவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். பொங்கல் தமிழ்நாட்டிலன்றி, இப்பரந்த இந்தியாவில் வேறெங்கும் கொண்டாடப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

உடல் உழைப்பைக்கேவலமானது என்று கண்டித்து ஒதுக்கி, பிச்சை புகுவதை பெருந்தொழில் என்று பேசப்படும் நூல்களை வேத நூல்களாகக் கொண்டுள்ள ஆரியர், எவ்வாறு உழவர் பெருநாளைக் கொண்டாடுவர் என்று கேட்டார். யாகயோகாதிகளை நம்பி வாழ்வதாகக்கூறும் ஆரியர் எவ்வாறு உழவுக் கருவியான ஏரையும், பயிர் விளைவிக்கும் பாரையும், பயிர்த்தொழிலின் சீரையும் புகழ்ந்துபேசி, அதற்கானவிழாக் கொண்டாடுவர் என்றும் இடித்துக்கூறினார்.

ஓமகுண்டத்தின் அருகில் உட்கார்ந்துகொண்டு ஆடு மாடுகளை அதிலபோட்டுப் பொசுக்கி, அவர்கள் கடவுளர்களான தேவருக்கும் மூவருக்கும் உணவளிப்பதாக ஊரை ஏமாற்றி, வாழ்வகை செய்துகொண்ட ஆரியர், எங்ஙனம் உழைப்பால் உருவான பலனைக் கண்டு மகிழ்வும், அதுவெளிப்பட விழா கொண்டாடவேண்டுமென்ற விருப்பமும் கொள்ளுவர் என்று கேட்டார்.

ஆரியர் பண்டிகை அனைத்தும் தமிழர்களை அடிமையாக்கவும், ஆரியருக்குப் பெருமை தேடவும், ஆரியர்களால் மிக்க சூழ்ச்சியாகச் செய்துகொண்ட ஏற்பாடு என்பதை, பாமரரும் புரிந்துகொள்ளும் முறையில் ஆரியப்பண்டிகை ஒவ்வொன்றையும், தக்க மேற்கோள்களுடன், கண்டித்துக் கூறினார் பெரியார்.

ஆரியருக்கு அரண் செய்யும் முறையில், ஆரியர்களால் எழுதிவைத்துக்கொள்ளப்பட்ட வடமொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு, தமிழ்ப் புலவர்கள், அறிந்தும் அறியாமலும் தமிழில் இயற்றிய, தமிழருக்கும் தமிழுக்கும் கேடுசெய்து செய்துவரும், பொய் மலிந்த புராண இதிகாச நூற்களை, அவைகளின் தீஞ்சுவைக் கவியிலே கருத்தை இழக்காது, அத்தீய ஏடுகளைத் தீயிலிட்டுச் சாம்பலாக்க முன்வருவதே, தன்மானமுள்ள தமிழர்களின் உடனடிவேலை என்று கேட்டுக்கொண்டார்.

அறிவுக்குப் பொருத்தமற்ற, ஆரியர் கோட்பாடு, கருத்தழிக்கும் கடவுள் வழிபாடு, உரிமையை உருக்குலைக்கும் ஆரிய நீதிச்சுவடிகள், அவர்கள்தம் ஆபாசம்மலிந்த புராண இதிகாசக் குப்பைகள், முதலியனவற்றைத் தமிழர்கள் மனத்திலும் தீண்டுதல்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

ஆரிய கலாச்சாரத்தைக் கண்டு அருவருப்புகொண்டு, தமிழரின் உயர்ந்த ஒழுக்கத்தை, தமிழருக்கென்று மட்டுமில்லாமல், மக்கள் அனைவருக்குமே பொதுமறையாக இருக்க வேண்டுமென்ற பெருநோக்கோடு, மக்களுக்குள் பேதாபேதம் பார்க்காமல், அனைவரும் சமம் என்ற சமத்துவ நோக்கோடு, விபரீத முறையில் முளைத்த ஆரியக் கடவுளர்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு, ஏகதெய்வக்கொள்கையை எடுத்துக்காட்டி, அறிவுக்கு முதலிடந்தந்து, மனிதனை மனிதனாக மதித்து எழுதிய திருக்குறளை வள்ளுவர் வகுத்த வழியை மீண்டும் தமிழர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார் பெரியார். பொங்கல்விழாவைச் சிறப்பித்துப் பலப் பல கூறிவிட்டு, அனைவரும் இவ்விழாவை மேற்கொள்ளவேண்டியதின் அவசியத்தை எடுத்துக்காட்டிவிட்டு பெரியார் தமது உரையை முடித்துக்கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பின்னர் முதல்நாள் விழா முடிவுற்றது.

## 20—1—49

காஞ்சிகலியாணசுந்தரம் தலைமையில் இரண்டாம் நாள் விழா நடை

பெற்றது. முன்னுரையாக "தோழர்களே! சென்ற ஆண்டு நாம் இதே விழாவைக் கொண்டாடிய காலத்திற்கும் இன்று விழாக் கொண்டாடும் காலத்திற்கும் உள்ள ஓராண்டு இடைக்காலத்தில், பொதுவாக நாட்டில் நிகழ்ந்த பல சம்பவங்களையும், குறிப்பாக உழவர் உலகில் நேர்ந்த சம்பவங்களையும், நாம் கருதிப் பார்க்க வேண்டும். நாட்டுக்கு விடுதலை கிடைத்து இன்று ஒன்றரை ஆண்டுக்கு அதிகமாகிவிட்டது. இதன் விளைவாக நாட்டுமக்களின் நிலை எந்தவகையில் மாற்றமுற்றிருக்கிறது? வீடில்லாதோருக்கு வீடும், நிலமற்றோருக்கு நிலமும், வேலையில்லாதோருக்கு வேலையும், தொழிலற்றோருக்குத் தொழிலும் இன்று கிடைத்திருக்கிறதா என்று நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். ஒப்புக்காவது அவ்வாறு கூறுவதற்கில்லை. இன்று அந்தப்பேறு வாய்க்கவில்லையானாலும், விரைவில் அது கிட்டும் என்று நம்பிக்கை கொள்ளும் தன்மையிலும், நமது ஆளவந்தார்களின் செயல் அமைந்திருக்கவில்லை. அதிகாரத்திலே இருக்கும் அவர்கள் முகங்களில் மகிழ்ச்சி பொங்கத்தான் செய்கிறது. ஆனால் மக்கள் முகத்தில் என்றும்போல் சோகம் கப்பிக்கொண்டுதான் இன்றும் இருக்கிறது. ஏன் இந்த நிலை நாட்டில் நீடித்து இருக்கிறது? விடுதலை சிலருக்கு சுபீட்சத்தையும் பலருக்குப் பலகாலமாக நிலைத்து வந்த இல்லாமையையும் கொடுக்கும் சாதனமாக இன்றும் இருக்கிறது. ஏன்?

உழவன் விழா இது என்று தலை நிமிர்ந்து கூறிக்கொள்ளுகிறோம். தமிழர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கவேண்டிய இப்புனித நாளில், தமிழர்களின் இல்லங்களில் வறுமை குடிபுகுந்து இருக்கிறது என்று சொல்வது மிகைபடக் கூறிய கூற்றாகுமா? ஏன் இந்த நிலை இருக்கிறது? இங்கு கழனி கரம்பாகவும், நீர் நிலையங்கள் வெடித்துக்கிடக்கும் பள்ளத்தாக்காகவும், காட்டாறு கட்டுப்பாடு இன்றிக்கடலோடு கலந்துகொண்டும், கவலையின் உருவாக ஆற்றலுள்ளோர் அவதிபட்டுக்கொண்டும், அதிகாரத்திலிருப்போர் கிடைத்த அதிகாரத்தைச் சுவைத்துக் கொண்டும் இருக்கின்ற ஆகாத நிலை—ஆபத்தான தன்மை நீங்கினாலன்றி, பொங்கல் விழா மகிழ்ச்சிக்குரிய நாளாக எவ்வாறு அமையும் தமிழர்களுக்கு?

'உற்பத்தி பெருக்கவேண்டும்' என்று ஆளுவோர் உரைக்காத நாள் கிடையாது. பயிரிடுவதற்குத் தகுதியான நிலங்கள், பண்ணையார்களின் சொந்தக் காடாக இருக்கும்பொழுது, நிலமற்ற—உழவுக் கருவியற்ற—அதற்கான முதலிட முடியாத நிலையிலுள்ள, ஆனால் ஆற்றல் மிக உள்ள — மக்களால் உற்பத்தியைப் பெருக்க எவ்வாறு முடியும்? சிலரிடமே குவிந்து கிடக்கும் நிலங்களை உழவர்களுக்கு—நிலத்தையே நம்பி வாழும் நல்லவர்களுக்குச் சொந்தமாக்கவேண்டும். அதுவும்போதாது. சத்துள்ள வித்து—நல்ல உரம்—நவீன உழு கருவி-கொழுத்த காளைமாடு-இவ்வளவும் உழவர்களுக்குக் கொடுத்தால், உணவுப் பொருளுக்கு வெளிநாட்டாரின் வாயற்படியைக் காத்து நிற்கவேண்டிய கேவலம், நமது நாடாளுவோருக்கு இருக்காது. இல்லையானால், பரந்தபூமி பல்கோடி மக்களைக் கொண்டது-பல அவதார அற்புதங்களைப் பெற்றது-அவனிக்கெல்லாம் ஆத்மார்த்த போதனை புரிந்தது-என்று ஏட்டிலே எழுதி-ஏமாந்தவர்களை நம்பச்செய்து எத்தர்களுக்கு வாழ்வளித்து-வறுமைப் படுகுழியிலே மக்களைத்தள்ளி, பழம்பெருமைப் பேச்சால் அதனை மறைத்து, அதிகாரம் செலுத்தச் சூழ்ச்சி செய்யும் ஆட்சியாளர்கள் தான் இவர்களும் என்று பழித்துப் பேசுவர் பாராளுவோரை பலரும்—பிற நாட்டாரும் கூட.

நம்மவர் ஆட்சியிலே நமக்குக் கிடைத்தது நல்வாழ்வு அன்று. முன்பிருந்ததைக் காட்டிலும் மோசமான நிலையை நமக்குத் தந்திருக்கிறார்கள் நாடாளவந்தவர்கள். ஊரூர் சிற்றூர்களை இணைக்கும் நல்ல பாதைகள் இல்லை. படிக்கப் போதுமான பள்ளிகளுக்கு ஏற்பாடு இல்லை. தொழிலாளர் துயரம் துடைக்கப்படுவதற்கு பதில், அவர்கள் ஏக்கம் பெருக்கப்படுகிறது. ஏதேதோ திட்டங்கள் ஏட்டிலே தினம் தினம் தீட்டப்படுகிறது. நிறைவேற்றினரா, இதுவரை ஒன்றும் இல்லை. ஆனால் ஒன்றில மட்டும் ஆளவந்தார்கள் வெகு ஊக்கத்தோடு உழைத்து வருகிறார்கள். மக்களின் உரிமை வேட்கையை உருக்குலைக்க, முடிந்த வரையில் முயற்சிக்கிறார்கள். வெற்றியும் தோல்வியும் மாறி மாறிப் பெற்று வருகிறார்கள். இதுவே இன்று நாட்டின் நிலை. இந்நிலையில் பொங்கல்விழா எங்ஙனம், தமிழர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டக் கூடிய திருவிழாவாக இருக்க முடியும்?" என்று பேசி முடித்தார்.

பின்னர் C. N. அண்ணாத்துரை பின்வருமாறு பேசினார்:—

"தோழர்களே! பொங்கல் விழா தமிழர் கண்ட பெருவிழாவாகும். இது அறுவடைவிழா. உழவனின் ஓராண்டு உழைப்பு உருவாகத் தெரியும் விழா. தனது உழைப்பால் குவிந்து கிடக்கும் செந்நெல்லைப் பார்க்கின்ற பொழுது, தன்னையும் அறியாமல் தனது தோள்கள் பூரிப்பதை உழவன் காண்கின்றான். தனது உள்ளத்தில் இதுவரை என்றுமில்லாத ஒரு இன்ப உணர்ச்சி தேங்கிக் கிடப்பதை உணருகின்றான். அந்த இன்ப வெள்ளம் முகத்தில் பாய்ந்து, கவர்ச்சியுள்ள புதுமுகமாகக் காட்சி அளிப்பதை, அவனது மனைவி மக்கள் காண்கின்றனர். மகிழ்கின்றனர். தனது உழைப்புக்கு உறுதுணையாக இருந்து, தனது உழைப்பை வெகு சாதாரண உழைப்பாக ஆக்கிவிட்ட மாட்டின் மீதும் அன்பு காட்டுகிறான் உழவன். மாட்டுக்கு விழாக் கொண்டாடுகிறான் நன்றி மறவாத நல்லவன். தான்பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற்றார்களோ இல்லையோ என்னும் ஐயத்தைப் போக்கிக்கொள்ளத் தனது நண்பர்களை—தனக்கு அறிமுகமானவர்களை—அவர்கள் மனைகளுக்கே சென்று கண்டு, அவர்களும் தன்னைப்போன்றே இன்பக்கேணியில நீந்தி விளையாடுவதைப் பார்த்து, அவ்வின்பத்திலும் பங்கு கொள்ளுகிறான். இதுவே பொங்கல் விழாவில் மறைந்து கிடக்கும் பொருள்—நாம் பெறும் படிப்பினை.

இன்று நாட்டிலே, அனைவர் மனைகளிலும் இந்த இன்பநிலை இருக்கிறதா? இருக்கமுடியுமா? ஏன் இல்லாமல் போய்விட்டது? என்று நாம் சிறிது ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இப்பொங்கல் விழாவின்போது மிராசுதார் மனையிலே இருக்கும் மகிழ்ச்சி, அவரது பண்ணையாள் பாவாடையின் வீட்டில் இருக்க முடியாது தான். சோம்பல் காட்டாது—சோர்வு தட்டாது—பயிர் விளைக்கப் பாடுபட்டவன்தான் பாவாடை! உழைத்து உழைத்து மேனி கருத்து இருப்பதும் உண்மைதான். இருந்தாலும் உழைக்கத்தான் அவனுக்கு உரிமை உண்டு. உழைப்பின் பயனை அனுபவிக்கவிடாமல்,

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 30—1—49 [காஞ்சி

# ஏன் இந்த அச்சம்?

இவ்வாண்டு முடிவிற்குள் புதிய அரசியல் அமைப்பு உருவகிவிடும். அடுத்த ஆண்டுத் துவக்கத்தில தேர்தல் வைததுகொள்வதும உறுதியாகிவிட்டது. இத்துணைக்கண்டத்தில் மக்களாட்சிக் கோட்பாடு நன்கு வேரூன்றவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது. மக்களாட்சி முறை மலர்ந்ததே மேல்நாட்டில். இங்கிலாந்து தவிர்த்த மற்ற ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சிமுறை இன்னும் வளம்பெறவில்லை. மனிதனைப் பிறவியினால் பேதப்படுத்தி, உயர்வு தாழ்வு கற்பித்து, கடவுள் கட்டளை இதுவென்று சாதித்து, கண்ணன்காட்டிய வழியை அதற்குச் சாட்சிக்கிழுத்து, த போன்ற மனிதனை மிருகத்திலும் கேவலமாக நடத்திப் பழகிவந்த நாட்டில், ஜனநாயக முறையை நினைத்ததும் நிறைவேற்றிவிடக்கூடிய நிலை உண்டாகிவிடாது. நல்லதோர் ஜனநாயக முறையை நாட்டில் நிறுவ வேண்டுமானால், அதற்கான அறிவை மக்களிடம் பரப்பும் பணியில், மக்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ளோர் அனைவரும் அரும்பாடு பட்டாகவேண்டும்.

மக்களாட்சி முறைக்கு, தேவைகளைத் தெரிந்துள்ளவர்களாகவும், வேஷத்தைக் கண்டு மயங்காதவர்களாகவும், கல்வி அறிவு வாய்க்கப் பெற்றவர்களாகவும், மக்கள் இருக்க வேண்டியது, முதல் தேவையாகும். இந்த ஆரம்பத் தேவை நமது மக்களிடம் மிக மிகக் குறைவு. காங்கிரசார் நாடாளும் நிலை பெற்றதும், மக்களுக்கிருந்த மதநம்பிக்கையை, கோலத்தைக் கண்டு காமுறும் அவதார பக்தியை, தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டது தான் முக்கிய காரணமாகும்.

விடுதலைப் போராட்டம் நிகழ்ந்த காலையில், விடுதலை வீரர்களின் வேஷத்தையும் கோஷத்தையும் கண்டும் கேட்டும், மக்கள் அன்பு செலுத்தினர்—ஆதரவு காட்டினர் அவர்களுக்கு. காங்கிரஸ்காரர்களின் ஆளும் திறமையைத் தெரிந்தோ, அறிவாற்றலை அறிந்தோ, வாக்குறுதியை நிறைவேற்றும் வாய்மையாளர்கள் என்பதை அனுபவத்தால் உணர்ந்தோ, மக்கள் தம்வாக்குகளை, அவர்களுக்கு அளித்து, தங்களுக்குச் சொந்தமான ஆளும் அதிகாரத்தை, அவர்களிடம் ஒப்படைக்கவில்லை.

காங்கிரஸ் தலைவர்கள், வெள்ளையர்களை எதிர்க்கும், பஜனைமடங்கண்டனர். இதற்கு முன்னால் திருமால் கூடம்-தேவார மடம்—முதலிய இடங்களில் தாளமும்கையுமாய்க்கூடி இருந்தோர் தேசிய பஜனை மண்டபத்திற்குள் குடிபுகுந்தனர். நாட்டின் பிடி வெள்ளையன் கையில் சிக்கியதால் நாட்டுக்கு விளைந்த கேடுகள் எவை என்று அறிந்துகொண்டு, அதனை நீக்கப் போரிடவேண்டுமென்று துணிவுகொண்டு, திரண்டதல்ல தேசியபபடை. எனவே வெள்ளையனை விரட்டினது கொள்ளையனுக்கு இடம் தருவதற்கா என்ற நினைப்பும், மாறி மாறித்தோன்றினும், மக்கள் உள்ளத்தில் நீடித்து நிலைத்திருப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது.

புதிய மடத்திற்கு ஆள் சேர்ப்பது எளிதான காரியமன்று. வெறும் மேளதாளச் சத்தத்தினாலேயே மக்கள் கவனத்தை ஈர்த்துவிட முடியாது. வெண்பொங்கலிலே கொஞ்சம் வெண்ணை காய்ச்சின நெய்யைக் கூடுதலாகச் சேர்க்கவேண்டும். பக்தர்கள் அப்பொழுதுதான், பழைய மடத்தைச் சிறிது காலம் மறந்து, புதியமடத்தைஒருகணநேரமாவது திரும்பிப்பார்ப்பார்கள்.

வெள்ளையன் வெளியேறினால், வறுமை தொலையும், வயிறார உணவு கிடைக்கும், பசிபோக்கப் பலவும் செய்வோம், என்றெல்லாம், அதிகாரமில்லாத நேரத்தில், ஆள் திரட்டுவதற்கு ஆசைவார்த்தைகள் பலப்பல பகர்ந்தனர் இன்று கனமாகி உள்ளோர்—அன்று தேசிய மடத்துக்குத் தம்பிரான்களாய் இருந்தோர். வெள்ளையன் வெளியேறினான். பதவியில் பகட்டாக அமர்ந்துள்ளார்கள். மக்களுக்குக் கூறிய இன்பவாழ்வு தரப்படவில்லை. ஏதேதோ கூறுகிறார்கள் தங்கள் இயலாமையை வெளிக்காட்ட முடியாத நிலையில். ஏமாற்றம் அடைந்துள்ளனர் மக்கள். எரிச்சலும் கொண்டுள்ளார்கள். எதிர்த்துப் பேசலும்-ஏசலும் கிளம்பியிருக்கிறது. குரலிலேகொஞ்சம் கம்பீரம் தோன்ற, அச்சத்தை மறந்து, அடக்குமுறைகளுக்கு அஞ்சாது, அதட்டிக்கேட்கிறார்கள் ஆளவந்தவர்களை மக்கள். அச்சம் பிறக்கிறது ஆளவந்தார்களுக்கும்—அவர்களை அரியாசனத்தில் அமர்த்தி இருக்கும் காமராஜர்போன்ற 'ஆற்றல்' மிக்கோருக்கும்.

அன்று பரிவு காட்டிய மக்கள் இன்று பழித்துப் பேசுகிறார்களே என்று பதைக்கிறார். அன்று வரவேற்பளித்த மக்கள் இன்று வசை பாடுகிறார்களே என்று கவல்கிறார். அன்று மலர் தூவிய மக்கள் இன்று சுடுசொல் வீசும் நிலைபெற்றுவிட்டனரே என்று சோகிக்கிறார். எவர் மூட்டிய கலகம் இது என்று, எவர் எவர்மீதோ பாய்கிறார். அதேநேரத்தில் அதிகாரம்இருக்கிறது, அடக்கி ஒடுக்கப் படையை ஏவுவோம் என்று பயமுறுத்துகிறார். தேர்தல் வருகிறதே, வெற்றி பெறுவோமா வீழ்ச்சியுறுவோமா என்றும் அங்கலாய்க்கிறார். இதனைஎண்ணும்போதே அச்சம் அதிகரிக்கிறது முன்னிலும் அதிகமாக, திராவிடர் கழகத்தை வலியச் சண்டைக்கிழுக்கிறார். அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசைதவிர நமக்கு வேறு குறிக்கோள் கிடையாது என்று இந்த விவேகி நம்மீது பழியும் சுமத்துகிறார். ஏதோ ஆளும் அதிகாரம் இவருக்குத்தான் பரம்பரைப் பாத்தியம் என்று நினைத்துக் கொண்டு.

சேலம் தீர்மானத்தை நாம் இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை. தேர்தலில் தலையிடுவது எங்கள் முக்கிய கொள்கை அல்லவென்று எவ்வளவோமுறை நமது தலைவர் கூறியுள்ளார். நாமும் பலமுறை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் முறையில் ஐயத்திற்கிடமில்லாமல், அதிகாரம் பெறுவதுமட்டும் நமதுலட்சியமன்று என்று எழுதியுள்ளோம். இவ்வளவாலும், ஏனோ இந்த அன்பர் புத்தி பெறவில்லை? பழையபோக்கிலேயே பேசிவருகிறார்—அச்சம் கொள்கிறார்.

நமது லட்சியம், அவருக்குஓரோர் சமயம் அச்சத்தைக் கொடுத்தாலும் அவர் கட்டளை இட்ட வழி ஏவல் செய்ய அதிகாரம்இருக்கிறகாரணத்தால், நம்மை அலட்சியப்படுத்திப் பேச அவரால் முடிகிறது. நமது குறிக்கோளின் முழு உருவத்தையும் அவரால் புரிந்துகொள்ளமுடியாது.

இதற்கு, மேலும் கொஞ்சம் அறிவும் ஆற்றலும் தேவை. காமராஜரேகூட முயற்சி எடுத்துக்கொண்டால் சாத்தியமாகக்கூடும். ஆனால், அவருக்குள்ள அந்தஸ்து, அந்த வழியில் முயல்வதைத் தடுத்து நிற்கிறது. அவர் பெற்றுள்ள அந்தஸ்து நமது கிளர்ச்சியின் விளைவு என்பதை மறந்து, தனது தியாகத்திற்கும் திறமைக்கும் கிடைத்தபரிசு என்றுவீண் நம்பிக்கைகொண்டிருக்கிறார்.

தேர்தல் நெருங்க நெருங்க, அவர் இன்று கொண்டுள்ள அச்சமும் திகிலும் மேலும் மேலும் பல மடங்கு வளர்ச்சியுறும். அதனால் அவர் பேசும் பேச்சிலும் —மதிகுறைந்து— மமதைமிகும். மனிதப்பண்பை அவர் மறந்துபோனாலும் நாம் ஆச்சரியப்படவும்மாட்டோம் —ஆத்திரம் கொள்ளவும்மாட்டோம், அதுஒன்றுதான் அவரிடத்திலிருந்து நாம் எதிர்பார்க்கக்கூடியது என்பதால்!

காங்கிரஸ், இன்று எவரின் இருக்கூட்டமாக இருக்கிறது? பலன் கருதாப்பணி புரிவோர் அதில் எவ்வளவுபேர் இருக்கிறார்கள்? தியாகத்தீயில் குதிக்கத்தயாராக இருப்பவர்களின் தொகை எவ்வளவு? காந்தியாரின் நிர்மாணத் திட்டத்தில் இன்றும் நம்பிக்கைகொண்டு தொண்டாற்றுவோர் எண்ணிக்கை எவ்வளவு? இராட்டையும் தக்ளியும் சுமந்து சேவை செய்யும் சிலர்களின் கணக்கென்ன? இவைகளைக் கேட்காமல் இருப்பதே அன்றோ, இன்று தேர்ந்த தேசபக்தியாகக்கொள்ளப்படுகிறது.

அதிகாரத்துக்கு அலைவோர்—அமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவோர்—அது கிடைக்காது ஏமாற்றத்தால் அழுக்காறுகொண்டு அலைவோர்—உத்தியோகஸ்தர்களை உருட்டிமிரட்டி உதவி பெறுவோர்—லஞ்சத்தில்லஜ்ஜையின்றித்தேகத்தை வளர்க்கும் தியாகிகள்-பர்மிட்டுக்கு பல்லிளித்துக்கொண்டு காலங்கழிப்போர்—லைசென்சுக்கு நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு நாடாளுவோரை மிரட்டித்திரிவோர்—காண்டிராக்ட் வாங்கித்தருவதாக ஆசை வார்த்தை கூறி நாணயமற்ற முறையில் காசுக்காக வாழ்வோர்— பணம் தேடிகள்—சதிபுரிவோர் — ஒழுக்கமிழந்தோர்—பொய்யை மெய்யாகக்கொண்டு பிழைப்போர்— ஆக இன்னும் இதுபோன்ற பலர் திரண்டுள்ள சேவாஸ்ரமமாகவன்றோ, இன்று காங்கிரஸ்காட்சி அளித்துக்கொண்டு இருக்கிறது. இவ்வளவும் நாம் இட்டுக்கட்டிக்கூறும் இல்லாதவைகளல்லவே.!

'லஞ்சமும் ஊழலும் நிறைந்து இருக்கும் ஸ்தாபனங்களை எல்லாம் கலைத்துவிடுவதானால் முதன் முதல் கலைக்கப்பட வேண்டியவை எமது மத்திய மாகாண அரசாங்கமாகத்தான் இருக்கும். அங்கே பதவிகளில் வீற்றிருக்கும் மந்திரிகள் பிறரிடம் பெட்டிச்சாவியைக் கொடுத்துவிட்டு வெளியேற வேண்டியதுதான்.'

இவ்வாறு கோவை காங்கிரஸ் ஏடு, காலச்சக்கரம் எழுதுகிறது.

'அதிகாரம், அரசியலை ஊழல்மயமாக்கி விடுகிறது என்ற பழமொழி பிரபல்யமாக இருந்து வருகிறது. அதிகாரத்துடன் நமக்குத் தொடர்பு ஏற்பட்ட உடனேயே நம்மையும் ஒழுக்கம் கெடச் செய்து விட்டதென்பதை மறுக்க முடியாது. சிறிய ஒழுக்கம் என்ற உயர்ந்த பீடத்தில் தாங்கள் இருந்து வருவதாக இனிக் காங்கிரஸ்காரர்கள் கூறிக்கொள்ளவே முடியாது. ஒழுக்கம் பற்றிய தீர்மானம், காங்கிரஸ் தலைவர்களிலேயே மிகப் பெரிய தலைவராக விளங்கும் பண்டித நேரு உள்பட எல்லாக் காங்கிரஸ்காரர்களுக்கும் எச்சரிக்கையாகும். இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையானதாகும்!'

ஜெயப்பூர் மாநாட்டில், ஒழுக்கத்தீர்மானத்தின்போது, விலகப்போகும் காங்கிரஸ் செயலாளர் சங்கரராவ் தேவ், இவ்வாறு இடித்து இடித்துக் கூறினார்.

முன்னொரு நாள் வேலூர் சிறையில், தமது ஒழுக்கத்தின் உயர்வை நிலைநிறுத்திக்கொண்ட ஒழுக்க சீலர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பட்டாபி சீதாராமையா, காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்துபோய் உள்ள மாசுகளைத் துடைத்துப்புனிதத்தைத் தோற்றுவிப்பதற்காக, 17—1—49-ல் சுற்றறிக்கை ஒன்று அனுப்பி உள்ளார்.

“லஞ்சம், திருட்டு வியாபாரம் பற்றி எங்கும் புகார்கள் இருக்கின்றன....................நாமே (காங்கிரஸ்காரர்கள்) யாராலும் சந்தேகிக்கப்படாதவராயிருந்தால்தான் அவர்களுடைய முயற்சிகள் வெற்றி அடையும். இந்த இரண்டு ஊழல்கள் இருக்கிறது என்று சொல்லுகிறவர்களே பவுண்டன் பேனா முதற்கொண்டு மோட்டார்கள்வரை லஞ்சம், திருட்டு மார்க்கெட் முதலியவற்றில் ஈடுபட்டவர்களாக இருக்கிறார்கள்.”

லஞ்சம்—கள்ளமார்க்கெட் செய்து வருகிறவர்களே, அதுபற்றிப்புகார் அதிகமாகக் கூறுகிறார்கள் என்கிறார் பட்டாபி.

அமைச்சர்களை அண்டி மிரட்டி, உற்றார் உறவினர்களுக்கு வேலை தேடுவதோடு மட்டுமல்லாமல், போலீஸ் அதிகாரிகளை மிரட்டியும், கிரிமினல் வழக்குகளில் குறுக்கிட்டு நீதியையும் நேர்மையையும் குலைக்கும் திருப்பணியிலும் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று பட்டாபியின் அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

'சிவில் அல்லது கிரிமினல் கோர்ட்டுகளில் வழக்குகள் சம்பந்தமாகப்போலீஸ், நீதிபதிகள், நிர்வாகஸ்தர்கள் போன்ற அதிகாரிகளிடம் பொர்களுக்குப் போகக்கூடாது.'

காங்கிரசார் ஆட்சியில், வேலை கிடைக்காமல் போனாலும், வேறு வசதிகள் பெறமுடியாமல் போனாலும், தொல்லைகள் பல நீக்கப்படாமல் இருந்தாலும், சமநீதியாவது கிடைக்கிறது என்ற நம்பிக்கையாவது பொதுமக்களுக்கு இருப்பது சிறப்புடையதாகும். அந்த நம்பிக்கையையும் நாசம் செய்வதில் முனைந்திருக்கிறார்கள் தேசபக்தர்கள். நீதியையும் நேர்மையையுங்கூடத் தியாகம் செய்துவிடலாமென்று துணிவுகொண்டு விட்டார்கள் ஜோரான தியாகிகள்!

காங்கிரஸ் இன்று அடைந்துள்ள கேவல நிலையையும், அதில் சேர்ந்திருப்போர்களின் போக்கினையும் பட்டாபியின் அறிக்கை விளக்கமாக இருக்கிறது. அது, இதோ.

'போராட்ட சமயத்தில் ஒரே ஐக்கியமாக இருந்த காங்கிரஸ், சுதந்திரத்துக்குப் பின் எந்த விஷயத்துக்கும் போட்டி ஏற்பட்டு, இரு கட்சியினரும் மந்திரிகளையும் உத்தியோகஸ்தர்களையும் கண்டு தங்களுக்குப் பிடிக்காத விபரீதமான காரியங்களைச் செய்கின்றனர். சாதாரண விஷயமாக

'சினிமா தியேட்டர் கட்ட லைசென்ஸ் வாங்குவது போன்றவை முதற்கொண்டு எல்லா விஷயங்களிலும் மந்திரிகளுக்குள்ளும் நிர்வாகஸ்தர்களுக்குள்ளும் பிளவு உண்டாகும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறது. காங்கிரஸ்காரர்கள் இம்மாதிரி விஷயங்களில் தலையிடாமல் இருந்தால் ஒற்றுமையையும் புனிதத் தன்மையையும் நிலைநாட்ட உதவியவர்களாவார்கள்'

அமைச்சர்களும்—அவர்கள் ஆட்சியிலுள்ள நிர்வாகஸ்தர்களுக்கும் பிளவை உண்டாக்கிவிடுகிறார்கள், சொந்த லாபத்திற்காகக் காங்கிரஸ் தியாகிகளின் மனவளத்தையும் செயல் வண்ணத்தையும் பாருங்கள். பின்னர் கூறுங்கள், நிர்வாகம் ஏன் நிலை குலைந்து போகாது என்பதை! காந்தியார் பெயர் கூறி, விடுதலை பேச்சுப் பேசி, நாடாள வந்தவர்களின் சொந்தக் கட்சியிலே, நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் சூத்ரதாரர்கள் பெருகியுள்ளனர். நாடு சீரழிகிறது, மக்கள் வேதனைவளருகிறது. காங்கிரசாரின் சொந்தப் பணவேட்டைக் காடாகிறது நாடு. அனைவருக்கும் என்று சொல்லப்பட்ட சுயராஜ்யம், சொந்தக் கட்சியினரின் 'சுகராஜ்யமாக' மாறிவிட்டு இருக்கிறது.

ஊழல்மலிந்த ஸ்தாபனமாக—லஞ்சம் பெருத்த நிறுவனமாக—கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் நிரம்பியுள்ள சந்தையாக—காங்கிரஸ் மாறியுள்ளதைக் காமராஜர் காண்கிறார். இச்சூழ்நிலையில் அடுத்த தேர்தல் வருவது அவருக்கு அச்சத்தை ஊட்டுவதாக இருக்கிறது. அலறுகிறார் —அச்சப்படுகிறார்.

'அடுத்தத்தேர்தலில், காங்கிரஸ், காந்தி, பழையதியாகம் — முதலியவற்றின்பெயர் கூறிப்பொது மக்களை ஓட்டுக்கேட்க முடியாது'

காமராஜர், இவ்வாறு கோவையில் கூறி இருக்கிறார். காங்கிரஸ் பெயர் கூறினதில் மயங்கிமக்கள் மஞ்சள்பெட்டியை நிரப்பினர். கண்டபலன், பஞ்சம், நாற்றமெடுக்கும் அளவரிசி, புழுத்த சோளம், வண்டு இறங்கிய கோதுமை! காந்தியாரின் பெயரில் காதல் கொண்டு, வாக்களித்தனர் மக்கள். கைமேல் கிடைத்த பலன், கள்ளமார்க்கெட்டில், காங்கிரஸ்காரர்களே காவலாளிகளாக அமர்ந்து இருப்பது தான். தியாகத்தை நம்பி, ஓட்டுப் போட்டனர் மக்கள். தியாகிகள் வெறும் பணந்தேடிகளாக அலைந்து திரிவதைப் பரிதாபத்தோடு பார்க்கின்றனர். எனவே காமராஜர், மக்களை மயக்க, பழைய முறையை உதறித் தள்ளி விட்டு, புதியமுறையைக் கையாள முனைகிறார்.

எந்த முறையை இனிக்காமராஜர் கைக்கொண்டபோதிலும், காவியுடையிலும் காமிகள் உலவக்கூடும் என்பதையும், கமண்டலத்திலும் கள்ளிருக்கும் என்பதையும், தொழுத கையுள்ளும் கூர்வேல் இருக்கும் என்பதையும், மக்கள் தங்களின் அனுபவத்தின் மூலம் நன்கு புரிந்து கொண்டு உள்ளனர். ஆள்மாற்றமோ, உடைமாற்றமோ, இனியும் மக்களை ஏமாற்ற உதவாது. மக்களின் மனநிலையை நன்கு தெரிந்து கொண்ட காமராஜர், தேர்தல் என்ற உடனே பீதிகொள்வதும், பிறர் கட்சியினர் மீது பழி சுமத்துவதும், எவரும் எதிர்பார்க்கக் கூடியதேயாகும். காமராஜருக்கு இதைத்தவிர வேறு முக்கியமான வேலைதான் என்ன இருக்கிறது? இது ஒன்றைத் தவிர, வேறு எந்தப் பணியைத்தான் அவரால் மேற்கொள்ள முடியும்? தெரிந்ததை, தம்மால் முடிந்ததைத் தயக்கம் காட்டாமல் செய்து வருகிறார். காங்கிரஸ் தேர்தலில் தோல்வி பெறுவது உறுதி என்பதற்கு உதவியாகத் தனது கூடா ஒழுக்கத்தினாலேயே, மக்களின் அன்பையும் ஆதரவையும், அது இழந்துவிட்டது என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுவதிலிருந்து நன்கு புலனாகின்றது. காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே தோன்றியுள்ள மாச்சரியம், காங்கிரசிற்கு அடுத்த தேர்தலில் தோல்வியைத் தேடித்தரப் போகிறது. நம்மால் அல்ல அந்த நிலை ஏற்படப் போகிறது.

நமது நோக்கமெல்லாம், எவர் ஆண்டாலும், எப்படி ஆண்டாலும், மக்களுக்குச் சுகவாழ்வு கிடைக்குமா என்று பார்த்துக்கொள்வதுதான். திராவிடர் கழகத்தை சம்மந்தா சம்மந்தமில்லாமல் திரித்துக்கூறி, தாக்கித் திரிவதைக் காட்டிலும், காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்க முயற்சி எடுத்துக்கொண்டாலாவது, அரசியல் மரணம் காமராஜரை இன்னும் சில காலத்திற்காவது அண்டாமல் இருக்க இடமேற்படும்.

காங்கிரஸ்காரர்கள் சிறை செல்லப்பழகிக்கொண்ட அளவுக்கு நிர்வாகத்தை நடத்தப் பழகிக்கொள்ளவில்லை என்பதைக் காங்கிரஸ் தலைவர் பட்டாபி அவர்களே ஒப்புக்கொள்கிறார். ஆனால் திராவிடர் கழகத்தார் இதற்கு மாறுபட்டவர்கள் என்பதை அவரும் அவருடையசகாக்களும் உணராதது ஆச்சரியமல்ல. திராவிடர் கழகத்தாருக்கு நாட்டின் நிர்வாகம்தான் முக்கியமேயன்றிச் சிறைசெல்வது அவ்வளவு முக்கியமல்ல. எதிர்க் கட்சியினரின் நிர்வாகக் கோளாறுகளை அம்பலப்படுத்துகிறார்கள் திராவிடர் கழகத்தார் என்பதற்காகவே காங்கிரஸ் சர்க்கார் நம்மவர் சிலரைச் சிறையிலடைத்தாவது தமது ஊழல்களை மறைக்கலாம் என்ற போக்கில் நடந்துகொள்கின்றனர். இதை நமது அன்பர் காமராஜர் நன்கு உணர்ந்ததாலேயே தாம் செல்லுமிடங்களில் எல்லாம் திராவிடர்கழகத்தாரை மக்களுக்கு நினைவூட்டி, அவர்கள் நிர்வாகத்தில் மிகவும் திறமைவாய்ந்தவர்கள் என்ற உண்மையை சொல்லாமல் சொல்லி, அவர்கள் பதவிக்கு வந்துவிட்டால் நாங்கள் இன்னும் ஒருதலைமுறைக்கு அரசியலை எட்டிப் பார்க்கவும் முடியாது போய்விடும், எனவே எங்களைக் காப்பாற்றுங்கள்—எங்கள் பதவிக்குப் பங்கம் வராதபடி பார்த்துக் கொள்ளுங்கள், என்று பரிதாபங் கலந்த குரலில்பொதுமக்களை வேண்டிக் கேட்டுக்கொள்வதோடு, தங்கள் குட்டுவெளிப்படாதிருப்பதற்காகத், திராவிடர்கழகத்தார் 'துவேஷப் பிரசாரம்' செய்கின்றனர், அவர்களை நம்பாதீர்கள், என்ற திரையால் மறைத்துப் பேசுகிறார் காமராஜர். பேசட்டும். ஆனால் ஒன்றைமட்டும் காமராஜர் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். திராவிடர் கழகத்தாருக்குப் பதவிபெறும்வேட்கை சிறிதளவும் இல்லை என்பதை மீண்டும் ஒரு முறை நினைவூட்டுவதோடு, பதவி, சிறை சென்றதற்காகக் கொடுக்கப்படும் பரிசு என்ற கேவல நிலைமாறி, நாட்டு மக்களின் நலன் குறித்துச் செய்யப்படும் நிர்வாகத் திறமைக்கு அளிக்கப்படும் ஓர் உயர்ந்த நிலை என்பதை மக்கள் தங்கள் அனுபவத்தின் வாயிலாக நிரூபித்துக் காட்டும் காலம் தொலைவில் இல்லை என்பதையும் உணரவேண்டுகிறோம்.

✻

பரம்பரை வழக்கு, அவனைத் தடுத்து நிற்கிறது. அவன் உழைப்புக்கும்—அதன் பலனுக்கும்— இடையில் மலைப்பாம்புபோல் பண்ணையார் நிற்கிறார். நாட்டுச் சட்டம் இதற்கு நல்லாசி கூறிக்கொண்டு இருக்கிறது. எனவே பாவாடையின் பண் குடிசையிலே, உழைத்து இளைத்தவன் ஒதுக்கு இடத்திலே, மகிழ்ச்சி மறைந்து, மனக் கலக்கம் மிகுந்து சோகம் கப்பிக்கொண்டு இருக்கிறது. விழாநாளிலும், அவன் வேதனைக் கடலில் மூழ்கி, கரை சேற வழிவகை தெரியாது, கண்களைக் கசக்கி, காலங்கழித்து வருகிறான். நாம் அவனது துன்பத்தைத் துடைத்து, இப்பொங்கல் விழவை அவனுடைய சொந்த விழாவாக்கும் நற்பணியில் ஈடுபட வேண்டும் இனியாவது.

இத்தகைய விழாக்களால், கிராமத்து மக்களுடன் நகரத்து மக்கள் கலந்து உறவாட நல்லதோர் வாய்ப்பினைத் தேடித் தரலாம். நாம், கிராமத்து மக்கள் என்ற உடனே, அவர்கள் அமெரிக்கா அறிவரோ, ஆகாய விமானம் ஏறுவரோ, மின்சார சக்தியைத் தெரிவரோ, ரோவியின் ஆற்றலை உணர்வரோ, என்று கொஞ்சம் தாழ்வாக, அவர்களை மதிப்பிட்டுக் கொள்ளுகிறோம். ஆனால், அவர்கள், நம்மை அணுகி, சீரகசம்பாவிற்கும் சம்பாவிற்கும் உள்ள வேற்றுமை தெரியுமோ, கார் எத்தனை காலத்துப் பயிர்? களர் நிலத்தில் கரும்பு பயிராகுமா? ஏரியிலே உள்ள தண்ணீர் எவ்வளவு காலத்துக்குப் பாயும்? பரம்படிப்பது எதற்கு? நாற்று நடுவது எப்படி? விதை தூவத் தெரியுமோ? என்று கேட்டுவிட்டால், அனைத்தும் நாம் அறிவோம் என்று ஆணவம் கொண்டிருக்கும் நமது முகத்தில், எது தோற்றமளிக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது நல்ல காலம்—அவர்களுக்கு—கிராமத்தவர்களுக்கு—இன்னும் அந்தத் துணிவு பிறக்கவில்லை—அந்த எண்ணம் பிறந்துவிட்டிருந்த போதிலும்!

உணவு முக்கியமானது — நாம் அனைவரும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது. ஜீவாதாரமான இதைப்பற்றி நாம் அறிந்திருப்பதோ பூஜ்யம். வேறு, பேசுகிறோம் பலப் பல. இத்தகைய விழாக்களினால், இத்துறையில் நமக்குள்ள குறைபாட்டினை, கிராமத்து மக்களுடன் நெருங்கிப் பழகுவதால், களைந்து கொள்ள ஏதுவாகும். மாட்டுச் செல்வம் நாட்டுச் செல்வமாகும். மேல்நாடுகளில் ஒரு பசு பத்துப் படிக்கும் அதிகமாக பால் கொடுக்கின்றது. அங்கு பசு தெய்வமாகக் கொண்டாடப்படுவதில்லை. இங்கு பசு நமக்குத் தெய்வம். கும்பிடுகிறோம், கொண்டாடுகிறோம். அது தரும் பாலோ ஒரு குழந்தைக்கும் போதுமானதாக இருப்பதில்லை. இந்தப் பக்கத்து மக்களிடம் நல்ல பசுக்களை வளர்ப்பவர்களுக்கு அடுத்த ஆண்டு ஒரு ஐம்பது ரூபாய் பரிசு தருவதாக இங்கே அறிவித்துவிடல் வேண்டும். அடுத்த ஆண்டு பாருங்கள் இந்த வட்டாரத்தில், பசுவைத்திருக்கும் கிராமத்து மக்கள் எவ்வளவு கண்ணும் கருத்துமாகப் பசுக்களைக் காப்பாற்றுகிறார்கள் என்று. இதுபோலவே, விரைவாக அறுவடை செய்கிறவர்களுக்குப் பரிசு, நிலத்தை நன்றாக உழுபவர்களுக்குப் பரிசு, இன்னும் இது போன்ற பல வகைகளிலும் பரிசு வழங்க நமது தோழர்கள் முனைந்தால், அடுத்த ஆண்டிற்குள்ளாக இப்பகுதியில், பலவிதத் துறைகளிலும் கிராமத்து மக்கள் முன்னேற்றம் பெற மார்க்கம் பிறக்கும்.

நாம் இந்த விழா கொண்டாடுகிறோம். ஆனால் இந்த வேலையிடைக்காமல், வாழ வழிவகை தெரியாமல், வெளிநாடு சென்றுள்ள தமிழர்கள் நிலை இன்று எவ்வாறு இருக்கிறது? இந்த நாளில் நாம் கொள்ள முயற்சிக்கும் சிறு இன்பமும், வெளிநாடுகளில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எண்ணினால், துன்பத்தால் மூழ்கிவிடுகிறது. தென்னாப்பிரிக்கா டர்பன் நகரில், அங்குள்ள ஆப்ரிக்கர்கள், நமது தமிழர்களை, தீயிலிட்டு வேடிக்கைபார்க்கின்றனர். சித்திரவதை செய்கின்றனர். சொத்துக்களைச் சூறையாடுகின்றனர். அழவும் சக்தியற்று அலறுகிறார்கள். இக்கொடுஞ்செயலுக்கு எவர் காரணம்—எவர்மீது பழி சுமத்துவது என்பதில் காட்டப்படும் அக்கறை, அங்கு சென்றுள்ள தமிழர்களை தாய்நாட்டிற்கு வாருங்கள் என்று அழைப்பதில் இருக்கக் காணோம். இன்று அவர்கள் கூலிகள் அல்ல. அரசியல் விடுதலை பெற்றுள்ள இந்தியத் துணைக்கண்டத்தின் பிரஜைகள் அவர்கள். புதிய நிலை—புதிய தொல்லைகளையும் தோற்றுவிக்கிறது. சிங்களத்திலே தமிழர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். மலாயாவிலும் நமது தமிழர்கள் நிலை இதுதான். பர்மாவிலும் வேறு அல்ல. அவர்களை — நமது தமிழர்களை, மீண்டும் தாய்நாடு ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு நாம் அனுப்புவோம் அழைப்பு. இதனை, முன்னிருந்து செய்யவேண்டிய பொறுப்பு ஆளவந்தார்களுடையது. அவர்கள், இதுவிஷயத்தில் கவலைக்குறைவாக இதுவரை இருந்துவிட்டார்கள். இனியும் இவ்வாறே இருப்பார்களானால், இறுதியாக எச்சரித்துவிட்டு வெளிநாடுகளில் வேதனைபட்டுக் கொண்டிருக்கும் தமிழர்கள் அனைவரும் தாய்நாடு வந்துசேரும்வரை நாம் பணி புரிவோம். இதுவே நமது எதிர்காலப் பணியாக இருக்கட்டும். இதுவே, எனது பொங்கல் செய்தி" என்று பேசிமுடித்தார்.

## 21—1—49

புலவர் கோவிந்தன், தலைமை தாங்கி, முன்னுரையாக முக்கிய சொற்பொழிவாளரின் தொண்டினை சிறப்பித்துச் சில கூறினார்.

தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதன் பேசினார்.

"நாம் இந்த அறுவடை விழாவை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழையே கற்று, தமிழிலேயே பேசிப்பழகி, தமிழ்ப்பண்பு பெற வேண்டுமென்ற உறுதியினை நாம் மேற்கொள்ளவேண்டும். எல்லாத் துறைகளிலும் ஆரிய ஆதிக்கம் இன்று தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கிறது. தமிழர்களுக்கு ஆகாத இந்த ஆரியம் அழிக்கப்பட்டே ஆகவேண்டும். சுதந்திரத் தமிழ்நாடு காண ஒவ்வொரு தமிழனும் முனையவேண்டும். முதலில் தான் தமிழன் என்ற உணர்வும், இரண்டாவதாகத் திராவிடன் என்ற நினைப்பும், மூன்றாவதாக இந்தியன் என்ற எண்ணமும், நான்காவதாக ஆசியன் என்ற கோட்பாடும் தமிழன் உள்ளத்தில் இடம் பெறவேண்டும். அன்றுதான் தமிழன் தன்மானமுள்ள தமிழனாக ஆகமுடியும்.

தமிழ் இசை இயக்கம் தோற்றுவித்தகாலை, தமிழிலே இசைகிடையாது என்று தவறாகத் தருக்கித்தனர் சிலர். தோல் கருவி துளைக் கருவி—நரம்புக்கருவி என மூன்று வகையாகப் பிரித்து நமது முன்னோர்கள், இசை இன்பம் நுகர்ந்து வந்தனர் என்பதனை, தனித்தமிழ்

இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழுக்குச் சிறப்பெழுத்தாகக் கூறப்படும் 'ழகரம்' மூன்று இன இசைக் கருவிகளிலும் சென்று தங்கி இருப்பது குறிப்பிடத் தக்கது. அதாவது, யாழ், மழு, குழல் எனும் மூன்று வகைக் கருவிகளிலும் ழகரம் இடம்பெற்றிருப்பது, தமிழர்க்குத் தனி இசை உண்டென்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்—மொழி எனும் இருசொற்களிலும் ழகரம் இடம்பெற்றிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

நமது சிறந்த தமிழ்மொழியை வடமொழி கெடுத்து வெவ்வேறு மொழியாக்கிற்று, எஞ்சியதமிழை ஆங்கிலம் சிதைத்தது. இதுவும் போதாதென்று இன்று இந்தி நுழைக்கப்படுகிறது, இருக்கும் தமிழையும் சீரழிக்க. இந்தப்பேராபத்திலிருந்து தமிழைக் காப்பாற்ற, தமிழன் தவறுவானாயின் எதிர்காலத்தில் தமிழ் பண்புகெட்டு, தமிழ் என்ற மொழியும் தரைமட்டமாகிவிடும். தமிழர்கள் ஒன்று திரண்டு தமிழைக்காக்க நல்லதோர் வலிமையுடைய முன்னணி அமைக்கவேண்டும். இதுவே நான் தமிழர்களை வேண்டிக்கொள்வது!!" என்று பேசினார்.

தலைவர் முடிவுரையில் 'திராவிட நாடு' கேட்பதற்கும், அதற்காகக் கூறப்படும் காரணங்களுக்கும் 'தமிழ்நாடு' கேட்கப் படுவதற்கும், அதற்காகக் காட்டப்படும் காரணங்களுக்கும், அடிப்படையில் எந்தவித வேற்றுமையும் கிடையாது என்றும், மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்குத் தான், இந்த இரு பிரச்னைகளுக்கும் முரண்பாடு இருப்பதாகத் தெரியுமென்றும் குறிப்பிட்டுவிட்டு, மனமிருந்தால், இருசாராரும் ஒரே முன்னணி அமைத்து, ஆரியத்தை எதிர்க்க இடமேற்படுமெனறும் கூறி முடித்தார்.

### 23—1—49

சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில 'விடுதலை' ஆசிரியர் எஸ். குருசாமி அவர்கள்,

"நம் இபக்கத் தோழர்கள் பேசுவதுபோலநடக்கவும்பழகிக்கொள்ள வேண்டும். நாம் அம்மாதிரி நடக்காவிட்டால், பிற கட்சியினர் கேலி செய்வார்கள் என்பது மட்டுமல்லாமல், நமக்கும் அவர்களுக்கும் அடிப்படை வேற்றுமை இருக்கிறது என்று நாம் கூறுவதற்கும் அருத்தமில்லாமல் போய்விடும்.

நாம், பெண்களுக்குச் சமத்துவம் வழங்கவேண்டும். அவர்களை, நமது அடிமைகள் என்று கொள்ளுதல் குற்றமாகும். பெண்களும் தங்கள் உரிமைகளைப் பெறுவதில் ஊக்கம் குன்றக்கூடாது. அன்றுதான் நாடு சீராகும்" என்று விரிவாகப் பேசியபின்னர், தலைவர் முடிவுரையுடன் பொங்கல் விழா இனிது முடிவுற்றது.

5-ம் பக்கத் தொடர்ச்சி

## 15 நாள் சிறை

15—9—48-ல், தூத்துக்குடியில் அடையாள மறியலில் கைது செய்யப்பட்டு 15 நாள் காவல் தண்டனை பெற்ற தோழர்களின் விவரம் வருமாறு:—

தோழர்கள்: கெ. வி. கெ. சாமி, மு. சண்முகவேல், பி. ஞானயுதம், எஸ். திரவியம், பி நடராசன், ஆர். எஸ். சுப்பிரமணியம, ஆர். அருணாசலம, பி.ஞானக்கண், பு.அந்தோணிமுத்து, எ. பொன்னுசாமி, சு.பொன்னுசாமி, ஆ. தேவசகாயம, ப. மருதப்பன், கு. மாரியப்பன், ச.சி. குருசாமி, ஆ. செல்லையா, குழந்தைவேலு, மா. மசாணமுத்து, மு. பாலையா, பொ. தங்கசாமி, எஸ். கே. பி. முத்து, சு. பச்சைபெருமாள், வே. பாண்டியன், கெ. எஸ். கோபால்ராஜ், வி. சேகரன், மு. பால்பாண்டி, கெ. தாளமுத்து, து. இரத்தினம, ஆ. வேலாயுதம், பி. பால், ஆர். ரத்தினம, து. தங்கராஜன், ரா. அருணாசலம், ஆர்.எஸ். மணி, எஸ். வி. கசிரசன், பி. கிருஷ்ணன், டி. சிதம்பரம், ம. ஆறுமுகம், கெ. வேல்சாமி, மு. அத்திசாமி, வி. பெருமாள், ஆர். முனுசாமி, சு. காசி, ஆர். காசியப்பன, எம். ரத்தினம், தனுஷ்கோடி, மா. தங்கவேல், பெ. மூக்கன், ம. காளிமுத்து, எஸ். துரைசிங், எஸ். முனியப்பன், த. செல்லையா, பி. கெ. சௌந்தர், ஆ. பழனிசாமி, பி. முத்துமாலை, நா. அருணாசலம், பொ. அருணாசலம், எஸ். எஸ். வாசன், வ. ஆத்திமுத்து, ஜோ. செல்லப்பாண்டி, சா. காளிமுத்து, ஈ. நல்லதம்பி, வ. பொன்னுசாமி, ஏ. திரவியம், பி. அருணாசலம், வ. குருசாமி, அ. பொன்னையா, ஆர். பெருமாள், த. பாலையா, ஜெ. டபுள்யு. செல்வராஜ், செ. குமாரசாமி, சி. நயினார், பெ. பொன்னையா, க. நடராசன், கே. சாமிநாதன், ப. ஐயப்பெருமாள், க. அருணாசலம், எஸ். துரைசாமி, எம். காசி, எஸ். ரத்தினசாமி, பி. தங்கராஜ், அ. இளையபெருமாள், எம். ஜெயராஜ், எம். காசி, ஆ. நாராயணன், வி. பொன்னுசாமி, எஸ். தங்கப்பன், யு. ரத்தினம், கே. துரைசாமி, எஸ். சாமுவேல், ஆ. ராமகிருஷ்ணன, மூ. ஆதி இத்துடன் பாண்டு வாத்தியம் முழக்கி, சென்ற மூன்று தோழர்களும காவலில் சேர்த்து வைககப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். (தொடரும்)

## ஈரோட்டில் உதவி நாடகம்

மறைந்த பழைய கோட்டைப் பட்டக்காரர் அவர்கள் பெயரால் காங்கயத்தில் கட்டப்படும் பள்ளிக்கூடத்திற்கும், அங்கு அமைக்கப்படும் 'அர்ச்சுனன் உணவு விடுதி'க்குப் உதவி நிதியாக 23—1—49-ல் ஈரோட்டில் ஸ்டார் டாக்கிசில் 'சந்திரமோகன்' என்ற நாடகத்தை அண்ணாத்துரையும் தோழர்களும் நடித்தனர். பெரியார் நாடகத்துக்குத் தலைமை வகித்தார். நாடகத்தின் மூலம் வசூலான தொகை ரூபா 7000—0—0 மும் பெரியார் அவர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபா 500—0—0 ம் மேற்படி பள்ளிக்கூட உதவி நிதிக் கமிட்டித் தலைவர் தோழர் V. C. சுப்பய்யா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தோழர் N E. பாலகுருவின் நன்றிகூறலுடன் நாடகம் இனிது முடிந்தது.

## வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு

4—2—49 காலை எட்டுமணியளவில் சென்னை செலக்ட் டாக்கிசில் தோழர் எம் ஏ. கிருட்டினசாமிக்கும், தோழர் வ. தணிகாசலம் அவர்கள் புதல்வி சரசுவதிக்கும் தோழர் அண்ணாத்துரை தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். அன்பர்கள் வருக.

4—2—49 மாலையில் பிரசிடென்சிக் கல்லூரியில் அண்ணாத்துரை பேசுவார்.

# ஆளவந்தார்களுக்கு அர்ப்பணம்

—✲—

மக்கள் ஆட்சி என்பது, அதிகாரத்தில் உள்ளவர்களின் அடக்குமுறைகளின்பலத்தால் அமைவதன்று விதவிதமான அடக்கு முறைகளின் துணைகொண்டு நடந்துவரும் ஆட்சி, நாட்டுமக்களின் விருப்பத்திற்கேற்ப அமைந்ததோர் நல்லாட்சி அமைப்பும் ஆகாது. மக்களின்குரல், ஆட்சி மன்றங்களில் அமர்ந்திருப்போரின் செயல்களில் பிரதிபலிக்கும் முறையாகும். தேர்தல் காலங்களிலே, கொடுத்த சிலபல வாக்குறுதிகளை, மக்கள் நம்பி—தீமைதொலைந்து நலம் பல ஏற்படும் என்று எதிர்பார்த்து, அன்போடு தங்கள் வாக்குகளை, நமது ஆளவந்தார்களுக்கு அளித்தனர். நம்மவர், ஆட்சி அமைத்தால் புதுவாழ்வுபூக்கும், நாட்டில் உள்ள பல கேடுகளும் துடைக்கப்பட்டு, பொன்னுலகமாக நமது நாடு ஆக்கப்படும் என்று அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயர் ஏற்பாடான, சட்டப்புத்தகங்களில் உள்ள, பற்பல விதமான அடக்குமுறைக் கட்டங்கள் அறவே அகற்றப்பட்டு, ஆளும் அதிகாரம் பெற்றிராத பொழுது பரிவாகப்பேசப்பட்ட அன்புமுறை, ஆட்சிப்பீடத்திலிருந்துகிளம்பும் கட்டளைகளில், கலந்திருக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். அடக்குமுறைகளின் அவலட்சண சொரூபம், அன்று, ஆளவந்தார்களின சொற்களில் மறைந்து இருந்தது என்பதை மக்கள் அறியார். அகிம்சை—சத்தியம் என்று இரு உயர்ந்த பண்புகளின் இருப்பிடம் நமது ஆளவந்தார்கள் என்று, எண்ணத் தொலையாத மக்கள் நம்பிக் கொண்டு, நாட்டின் உரிமையை, அவர்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர். ஆனால், இன்று நாம் மட்டும் அல்ல, நல்லாட்சியில் நாட்டமுடைய நல்லறிஞர்கள் பலரும், ஆளவந்தார்களின் போக்கிலே, இன்று எதனைக்காண்கின்றனர்?

சத்தியம்—ஆளவந்தார்களின் செயலில் ஒருதுளியும் இடம்பெறவில்லாததோடு, சொற்களை விட்டும் தொலைந்து நீண்ட நாள் ஆகிவிட்டது என்ற முடிவிற்கே வரவேண்டியதாக இருக்கிறது! அகிம்சை-ஆட்சிக்கல்ல எனும் திரையிட்டு, தினம் தினம் சித்திரவதை செய்யப்படுகிறது! உண்மையான சத்யாக்கிரகிக்கு இருக்கவேண்டிய பண்புகளில் சிறப்பானது என்று கூறப்பட்டு வந்த சகிப்புத்தன்மை, ஜனநாயகக் கோட்பாட்டிற்கு இன்றியமையாது இருக்க வேண்டிய அந்த உயர்ந்த பண்பாடு, ஆளவந்தார்களாக உள்ள இவ்வாத்மார்த்தவாதிகளிடம், என்றாவது செயலில் இடம் பெற்றிருந்ததுண்டா என்று சாதாரணமானவர்களும், ஐயம் கொள்ளுகின்ற அளவிற்கு ஆளவந்தார்கள் நடந்துவருகிறார்கள்! அன்பு,—பிறருக்கு போதிப்பதற்குத்தக்கதோர் பொருளாக இருக்கிறதேயன்றி, நித்திய வாழ்க்கையில் மேற்கொள்வதற்கு ஏற்றதான் குறிக்கோளாகக் கொள்ளவில்லை, மன்றமேறியுள்ளோர்! அதிகாரம்—அதனைக் காட்டிக்கொள்ளவும், காப்பாற்றிக் கொள்ளவும், தேவைப்படும் மக்கள் அன்பு ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டு, ஆங்கிலேயர் வகுத்துவிட்டுப் போன அடக்குமுறைச் சட்டங்களை, ஆளவந்தார்களாவதற்கு முன் தங்களாலேயே கண்டிக்கப்பட்ட அவைகளை, அவைகளின் கொடுமைகளுக்கு ஆளானதன் விளைவாகவே மன்றமேறும் மாண்பு தங்களுக்குக் கிடைத்தது என்னும் அனுபவ உண்மையையும் மறந்து, தேடித்தேடி, ஆங்கிலேயர்கள் மக்கள்மீது வீச அஞ்சிய அடக்குமுறைகளை, நமது ஆளவந்தார்கள், ஆட்சிக்கு அரண் செய்யும் அருமையான சாதனங்களாகக் கொண்டுள்ளனர். வேறு எக்கட்சியினரும — எந்நாட்டிலும் — இதுவரை பெறமுடியாத அளவிற்கு, சொந்தத்தில பாட்டாளி பெரும வாய்ப்பினைப் பெற்றும், அது தரும் போதனையைச் சொந்தத்தில் நன்கு பயின்றும், அடக்குமுறைகளுக்குத் தூபமிடும் கோணல் மதியினை, நமது ஆளவந்தார்கள் பெற்றுவிட்டு இருப்பது, இன்று நாம் காணும் விசித்திரமாகும்!

அடக்குமுறைகளை வீசிய ஏகாதிபத்தியத்தைக் கண்டித்து ஏற்றம் பெற்றுள்ள இவர்கள், ஏகாதிபத்தியத்தை வீழ்ச்சியுறச் செய்தது தாங்கள் அடக்குமுறைகளுக்கு ஆளானதுதான் காரணமென்று பெருமையாகப் பேசிக்கொள்ளும் இவர்கள், ஏகாதிபத்தியத்தையே சிருஷ்டித்துவிட்ட அடக்குமுறைகளை வேலைக்கு அழைப்பது, எதுபற்றியோ, நாம் அறியோம்.

நமது ஆளவந்தார்களின் செயலால் நாட்டு மக்களுக்கு நாசம் சம்பவிக்கும் என்று நாம் மனமார நம்புகிறோம். அதற்கான விளக்கங்களை, சிறிதளவு விவேகம் உள்ளவரும் புரிந்துகொள்ளும் முறையில், பொதுக்கூட்டங்கள் மூலமும், மாநாடுகள் மூலமும், பத்திரிகை வாயிலாகவும், எவரும் மறுத்துக் கூறாத நிலையில், கூறி வருகிறோம் விளக்கிக்கூறினோம் — ஆளவந்தார்கள் நோக்காதினராக இருப்பது, முன்னுள் முதற்கொண்டா, புதிதாக ஏற்பட்டதா, என்று சந்தேகம் ஏற்படும் அளவிற்கு, நமது வாதங்களை அலட்சியப்படுத்தினர். கேலியும்கிண்டலும் செய்த பின்னர் நமது குரல், மக்களின் மனைகளிலும் மனங்களிலும் குடிபுகுந்தன. இதன் பலனாக, ஆளவந்தார்கள்மீது மக்கள் கொண்டிருந்த மயக்கம் சிறிது சிறிதாகத் தெளிய ஆரம்பித்தது. அதே நேரத்தில், மக்களிடம் தோன்றியுள்ள புதிய நிலை, ஆளவந்தார்களின் உள்ளத்தில் அச்சத்தை ஊட்டியது. மெள்ள மெள்ள, அது, வளர்ந்தது. அடக்குமுறைகளின் துணைகொண்டுதான், அந்த அச்சத்தைப் போக்கிக் கொள்ள — மறைத்துக்கொள்ள — மனச்சாந்தி பெற — முடியுமென்ற முடிவிற்கு வந்துவிட்டனர். நமது கூட்டங்களுக்குத் தடைவிதிப்பதன் மூலம், மக்கள் செவிகளில் நமது குரல் புகமுடியாமல் செய்துவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டனர். நாடெங்கும் 144, அதன் விளைவாயிற்று. மக்களிடம், தடையை மீற வேண்டுமென்ற முனைப்பு உருவாயிற்று. தடிகொண்டு தாக்குவது— மக்களின் குருதி மண்ணைச் சேருக்கும் வரையில் தடிக்குப் பணி தருவது, தரும வழி என்று தீர்மானித்து விட்டனர் ஆட்சியாளர். குடந்தை, அதிகார ஆணவத்தின் இருப்பிடமானதைக் கண்டோம்.

நாம் நமது உள்ளத்தைத் திறந்து பேசியபோது, நாம் அலட்சியம்செய்யப்பட்டோம் ஆளவந்தார்களால். நமது கோரிக்கையின் நியாயத்தைத் தெரிந்துகொண்டு மக்கள் தொகை பெருகவும், அதனுல் நமது முகாம் விரிவாகவும் கண்ட ஆளவந்தார்கள் உண்மையைத் திரித்துக்கூறி, நமது

கோரிக்கையைக் குலைத்துவிடும் 'நற்பணியில்' ஈடுபட்டனர். மேலும் நமது அணி பெருத்தது—வன்மையுடையதாகவும் மாறியது. ஆளவந்தார்களின் கருத்திலே மறைந்து கிடந்த கடு விஷம் அடக்குமுறை உருவிலே நாட்டில் நடமாடியது. இதற்குப் பின்னரும் நமது அணி சிர்குலையாமல் மேலும் மேலும் வளர்ந்துவருவதைக் கண்டனர்—சிறையிலே தள்ளினர் பலரை. ஆனாலும், நாட்டுமக்களுக்குக் கூறிவந்தனர், சிறையில் நமது தோழர்களைத் தள்ளவில்லை என்று! பிரசார பீரங்கி, தங்கள் கைகளில் பெரிதும் சிக்கி இருக்கின்றன என்ற எண்ணம்தான், மனமறிந்து பொய் கூறும் துணிவினை ஆளவந்தார்களுக்குக் கொடுத்தது. சத்தியம், வெட்கத்தால் தலை குனிகிறது, தனது முன்னாள் அர்ச்சகர்களின் புதிய போக்குக்கண்டு!

இதோ சிறைசென்றவர்களின் தொகை. சத்தியக் காப்பாளர்களின் அன்பினால், நாட்டுமக்களுக்குக் கிடைத்துள்ள நல்வாழ்வு. நாணயம் இருக்கிறதா நாடாளுவோர் உரையிலே என்பதை, நமக்கல்ல—நாடாளுவோரின் நல்லெண்ணத்திற்குக் கூறட்டும் — நேர்மைத் திறமுடையோர் — நெஞ்சில் உரமுடையோர். இது முடியவில்லையானால், ஆளவந்தார்களின் வாய்மையின் தரத்தையாவது தெரிந்துகொள்ளட்டும், அதுவே நமக்குப் பெரிதும் திருப்தி தரக்கூடியது.

* * *

10—8—48-ல் திருச்சியில் நடைபெற்ற இந்தி ஆதிரிப்புக்கூட்டத்தில் கேள்வித்தாள் கொடுத்ததற்காகத் தோழர் இராஜம்பிள்ளை கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

## 2 நாள் சிறைவாசம்

10—11—48ல் தர்மபுரியில் கல்வி மந்திரியாருக்குக் கருப்புக்கொடி காட்டினதற்காக 11 தோழர்கள்,

இராஜலிங்கம், இராஜாமணி, கோவிந்தராஜு, குட்டியப்பன், டி. கே. முத்துக்கிருஷ்ணன், அப்பாவு, பழனியப்பன், இராஜன், தியாகராஜன், முனியப்பன், ஆகியவர்களுக்கு 2 நாள் சிறைவாசம் தரப்பட்டது.

## 2 மாத தண்டனை

குடந்தைப் போரில் தடையை மீறியதாக கி. பி. கோ. 188-வது செக்ஷன்கீழ் குற்றஞ் சுமத்தப்பட்டு தோழியர் மணி அம்மையாருக்கும் தோழர் N. V. நடராஜனுக்கும், இரண்டு மாதம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. முறையே வேலூர் சிறைக்கும், திருச்சி சிறைக்கும் அனுப்பப்பட்டனர்.

## 3 மாத தண்டனை

குறிஞ்சிப்பாடியில், அடக்குமுறை நாள் கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்ட தோழர்கள்,

கே. டி. பி. பழனியப்பன், கலாமணி, க. நாராயணசாமி, பொ. இராசாராம், கா. குப்பன், பொ. தங்கராஜ், ப. பரமசிவம், இரா. சாம்பசிவம், பொ. கோவிந்தராஜன், ப. கோவிந்தன், மு. சக்ரபாணி, க. நாராயணசாமி, என். கிருஷ்ணன், ஆகிய 13 தோழர்கள் மீது, தடையுத்தரவைமீறியதாக வழக்குத் தொடரப்பட்டு, முன்கூறிய மூன்று செக்ஷன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு, மொத்தத்தில் 3 மாத வெறுங்காவல் தண்டனை தரப்பட்டு, திருச்சி சிறைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

## 6 மாதம் தண்டனை

1—1—49-ல் நடைபெற்ற அடக்குமுறைக் கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்ட பண்ணுருட்டி தோழர்கள்;

கா. நடேசன், நா. இராசவேல், வே. இராமானுசன், ப. மாணிக்கவேல், பா. சானகிராமன், குட்டியப்பன், வெ. சந்தானம், ஆகிய எழுவர் மீதும், 144 தடையுத்தரவை மீறினதாகக் குற்றஞ் சுமத்தி, இ. பி. கோ. 143, 145, 188; ஆகிய பிரிவுகளின் கீழ், ஒவ்வொன்றுக்கு 6 மாதம் வெறுங்காவல் தண்டனையும், அதனை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டனர். திருச்சி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

## ஒருவாரம் சிறை

23—8—48-ல் கவர்னர் ஜெனரலுக்கு ஸ்டேடியம் மைதானத்தில் கருப்புக்கொடி காட்டினதற்காக 59 தோழர்கள் கைதாகி, ஒருவாரம் சிறைத்தண்டனைபெற்றனர்:—

கொ. பெருமாள் (தொண்டைமண்டல உயர்நிலைப்பள்ளி) எஸ். விஜயன் (எழுகிணறு) பி. வி. ரோஸ் (கார்ப்பரேஷன் உயர்நிலைப்பள்ளி) எம். முனுசாமி (சூளைசெக்குமேடு) கே. ரகுபதி (திருவல்லிக்கேணி) ம. தி. ஜனகிராமன் (மண்ணிவாக்கம்) எம். ஆறுமுகம் (மயிலாப்பூர்) கிருஷ்ணசாமி: து. சகதீசன், மு. பாலசுப்ரமணியம் (பீமண்ணன் பேட்டை) டி. எட்வர்ட்ஸ், சி. ஆர். கண்ணன்: (வண்ணாரப்பேட்டை) என். ராஜகோபால், (தண்டையார் பேட்டை) சி. எஸ். திராவிடமணி ஏழுமலை (மீனாட்சியம்மன்பேட்டை) சி. நாராயணசாமி, (சிந்தாதிரிப் பேட்டை) பி. பாலசுப்பிரமணியம், (சுந்தரபுரம்) கே. செல்வராஜ் (ராயபுரம்) ரங்கபாஷ்யம், (சிவராஜபுரம்) எம். துலுக்காணம், (ராசிபுரம்) ஏ. கோவிந்தசாமி, (அயனாவரம்) தமிழன்பன் சாது (ஆறுமுகனேரி) ஏ. என். சாமி, (ஜாம்பஜார்) முத்து, எம். முனுசாமி, ஆர். மதியழகன், பி. சுப்பிரமணியம், (எழுகிணறு) ஆர். கே. ஜார்ஜ், சி. ஜெயராமன், எஸ். எ. விநாயகம், சண்முகம், (அலெக்சாண்டர் நகர்) ராதாகிருஷ்ணன், (புலியூர்) பி. துரை, (மூலக்கொத்தளம்) எஸ். எம். முருகன் (சிநுவாசநகர்) எம். ஏ. முருகேசன் பி. வி. கோவிந்தசாமி, கே. இளங்கோவன், (அரும்பாக்கம்) எஸ். சி. ஆனந்தம், (பார்க்டவுன்) பி. சேமன், (கிரோநகர்) எஸ். பத்மநாபன், (பெரியமெட்) ஆர். நாராயணசாமி, (எழும்பூர்) ஜே. நாதன், (ஸ்டான்லி நகர்) துரைசாமி, இராமசாமி, கே. டி. ஜெயராமன், (ராயப்பேட்டை) ம. பொ. கண்ணன், எஸ். வி. சீனு, வி. பட்டு, (கொச்சிக்குப்பம்) ஆர். பஞ்சநாதன், ஆர். கோபால், வி. சண்முகம், ஆர். பாண்டுரங்கன், (கொத்தவால்சாவடி) சி. ஜோசப், (எருக்கமாநகர்) மு. இன்பக்கடல், (கீழ்ப்பாக்கம்) எஸ். பத்மநாபன், (பெரியமெட்) ஜி. சம்பத்குமார், எம். பாலசுந்தரம்.

## 6 நாள் சிறை வாழ்வு

22—8—48-ல் சென்னையில் பெரியார் இல்லத்தில் நடைபெற்ற நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திற்குச் சென்றிருந்த, உறுப்பினர்கள் பார்வையாளர்கள் ஆகிய 93 தோழர்களையும் கைது செய்து, 6 நாள் சிறையில் வைக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர்.

பெரியார், வேதாசலம், சி. டி. டி. அரசு, என். வி. நடராஜன், மணியம்மையார், நீலமேகம், அன்னைத்துரை, ஈ. வி. கே. சம்பத், மணி

மொழியார், ராமச்சந்திரன், சி. கணேசன், சேலம் ஜகதீசன், கே. ஜே. குப்புசாமி, அழகிரிசாமி, நீடாமங்கலம் ஆறுமுகம், டாக்டர் தர்ம்மாம்பாள், ராமாமிர்தம்மாள், சேலம் சித்தையன், பெத்தாம்பாளையம் பழனிசாமி, சி. வி. எம். அண்ணமலை, மதிபழகன், மோகனராசு (வேலூர்) தங்கராஜ், செழியன், கே வி. கே. சாமி, வி. குருசாமி, திருநாவுக்கரசு, எ. பி. செனுர்த்தனம், கோவிந்தசாமி, முனுசாமி (விருத்தாசலம்) மொய்தீன், பராங்குசம், இ. வி. ஏ. வள்ளிமுத்து, ரோ. சு. அருணாசலம், ஆளவந்தார், லூயி டாமினிக், அய்யாசாமி, ராஜமாணிக்கம். பி. வி. பத்மனுபன். எஸ். குருசாமி, பி. டி. தனபால், ஆர். நடேசன், புலவர் மாணிக்கம், புலவர் கோவிந்தன் டி. பி. முருகேசன் (தஞ்) பி. தங்கவேலு (தஞ்) பொன்னுசாமி (தஞ்) குருநாதன் எஸ். ராஜகோபால் (தஞ்) சின்னத்துரை (கோ) எம். ரெத்தினம் (தூத்து) எஸ். நடராசன் (தூத்து) தங்கப்பழம் (தூத்து) சோ. கோ. முருகையன் (செ) கண்ணம்மாள். சீதாபதி, பி. முருகேசன் (புலியூர்) கே. பாலையா (புலியூர்) எஸ். மயில்வாகனம், இரா. ராஜகோபால், சீதாராமன், சங்கரய்யா, வி. சித்தையன், ஜே. கே. வேலாசாமி, பி. எஸ். கிருஷ்ணன், எம். பி. நடராஜன், பி. மாணிக்கம், பி. கே. என். சக்ரவர்த்தி, பி ஜீ. ஏழுமலை, ஆர். ஷண்முகம், எஸ். வெங்கட்ராஜ், எ. முத்துக்குமாரசாமி, ராஜு (தாதப) முத்துக்குமாரசாமி (பெத்து) ஆர். வெங்கட்ராமன் (நாட்ரா) சி. கோவிந்தராஜன் (வாணி) பிரமன் (நாட்) கே. சுப்பையா (வண்) பி. கே. ராமமூர்த்தி சுப்பிரமணி (சென்) வி. தாண்டவன், பி. ஜி சம்பந்தம் (பொறை) தியாகராஜன் (பொறை) ஏ. எஸ். ஷண்முகம் (திருப்பூர்) டி. கே. கோவிந்தசாமி, என். சே. கணபதி (காஞ்சி) ஜி. என். சாமி (தாராசுரம்) ஜி. பி. சோமசுந்தரம். வானமாமலை (திருச்சி)

## 6 வாரம் சிறை

1—1—49-ல், அடக்குமுறை எதிர்ப்பு வெற்றித்தின ஊர்வலம் நடந்தபொழுது திருவாரூரில் கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்தத் தோழர் சிங்கம் அவர்களை, இரண்டு சட்டங்களின் கீழ் தனித்தனியாக 6 வாரம் தண்டித்து, தண்டனையை ஒரே காலத்தில் அனுபவிக்கவேண்டுமென்று, நீதிபதி கட்டளை பிறப்பித்தார். திருச்சி சிறைக்குத்தோழர் சிங்கம் அனுப்பப்பட்டார்.

## மணிக்கணக்குச் சிறைவாசம்

22—8—48-ல், அமைச்சர் சந்திரமௌலி திண்டுக்கல் சென்றபொழுது, தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கும் முறையில், கருப்புக்கொடி பிடித்து காலையிலும் மாலையிலும் ஊர்வலம் வந்த 19 தோழர்களையும் போலீசார் கைது செய்து, காவலில் வைத்திருந்து, இரவு 10-மணிக்கு விடுதலை செய்து விட்டனர்.

காலையில் கைது ஆக்கப்பட்டவர்கள்:— பி. சமதர்மன், ர. வில்வநாதன், வெ. ராஜு, ஜி. குருசாமி, எம். எம். தங்கராஜு, எஸ். பெரியசாமி, எஸ். கந்தசாமி, அ. பெரியசாமி, எம். எம். கந்தசாமி.

மாலையில்:— சி. எஸ். சிவசூரியன், எஸ். பொன்னுசாமி, ஈ. குருசாமி, அ. சுப்பையா, நா. மு. மௌலானு, ச. சின்னத்துரை, எஸ். ஜான், ஜேவியர், வெ. வெள்ளைச்சாமி, சண்முகம்.

## ஒருவாரம்

26—8—48-ல், சென்னையில் மறியல் முடிந்தவுடன் எஸ். அச்சுதன், ஏ. சுப்பிரமணியன் ஆகிய இரு தோழர்களையும் போலீசார் கைது செய்து காவலில் வைத்தனர். நான்கு நாள் சென்றபின், விசாரிக்கப்பட்டு, ஒருவாரம் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

## 2 வாரம் சிறை

சென்னையில் 7—9—49-ல் புதிய கவர்னர் பவநகர் மகாராஜா பவனி வந்த காலை கருப்புக்கொடி காட்டிய 15 கழகத்தோழர்கள் கைது செய்யப்பட்டு இரண்டுவாரக் கடுங்காவல் தண்டனை தரப்பட்டது, தோழர்கள் விவரம்:— திராவிடமணி, (அமிஞ்சிக்கரை திராவிடர்கழகம்) நந்தகோபால், கபாலி, முனிசாமி, ராஜாராம் குடந்தை சொக்கலிங்கம், பாலகிருஷ்ணன், (தூக்காணம்,) எ.எம். சுவாமி, (திருவல்லிக்கேணி திராவிர் இளைஞர் கழகம்) சிறுத்தொண்டன், லோகநாதன், (காசிபுரம்) அபூபக்கர் மகமத்நயினு, பாண்டுரங்கன், (கொத்தவால்சாவடி) எட்வர்ட், (தம்பையரித்தெருவு, திராவிட இளைஞர் கழகம்.)

## நடு நிசியில் சிறை—நண்பகலில் விடுதலை

சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா பதவியேற்ற தினமான 7-9-48-முன்னுள் இரவு, சென்னை போலீசார் கழக முக்கிய தோழர்களைக் கைது செய்து போலீஸ் காவலில் வைத்திருந்து மறுநாள் பகல் ஒருமணிக்கு விடுதலை செய்து விட்டனர். இதோ, அந்தத் தோழர்கள்—C. D. T. அரசு, என். சுப்பிரமணியன், எம். அநந்தப்பன், டி. டி. பாண்டியன், என். கிருஷ்ணன், எஸ். நடராசன், கே. கண்ணப்பன், கே. கலைச்செல்வன், ஜி. மாரியப்பன் (இவர்கள் மறியல் தொண்டர்கள்) எம். கே. தங்கவேலு, நாகரத்தினம், டி. கோவிந்தன், சி. தங்கராஜ், க. ஆரியசங்கரன், அவர்தந்தை எ. கனகராஜ், N. V. நடராசன், என். எம். சுப்பிரமணியன், வி. டி. பெரியசாமி, சி. வி. ராஜன்.

## ஒருவார சிறைவாசம்

இந்தி எதிர்ப்பு மறியல் தொண்டர்களாகவும், கண்காணிப்பாளர்களாகவும் ஆட்சியாளர்களின் போக்கை எதிர்த்து வந்த தோழர்களைப்போலீசார் கைது செய்து, அனுமதி இன்றி ஊர்வலம் நடத்தினதாகக் குற்றஞ் சுமத்தி, ஒரு வாரம் சிறைத் தண்டனையை வாங்கித்தந்தனர். புன்முறுவலோடு சிறை புகுந்த தோழர்கள் விவரம் வருமாறு:— காஞ்சி மணிமொழியார், டி. எஸ். வி, ராஜன், எம் கோவிந்தன், பிரகாசன், துரைராஜ், சின்னசாமி, செல்வம், துரைசிங்கம், மதுரை, வேணுகோபால், முனிசாமி, சுந்தரம், சந்திரசேகரன், கோதண்டன், கன்னியப்பன் ஆகியோர்.

## ஒருவாரம்

8—9—48-ந் தேதி மூன்று குழுவினராக அமைந்து மறியல் செய்த தொண்டர்கள் 23 பேர்களும், உத்திரவின்றி ஊர்வலம் நடத்தினதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டு, ஒரு வாரம் காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். இதோ, அவர்கள்:- சி. டி. டி. அரசு, கண்ணபிரான், சம்பந்தம், துரைக் கண்ணம்மாள், என். சுப்பிரமணியம், எம். அநந்தப்பன், டி. டி. பாண்டியன், என். கிருஷ்ணன், என். நடரா

(2-ம் பக்கம் பார்க்க)

# அறிக்கை-எதற்கு? யாருக்கு?

★

உழவு—முக்கியம். இங்கு, அது மூலத்தொழில். நாளுக்கு நாள் உழவன் குடும்பம் பெரிதாயிற்று. உழவர்கள் பெருத்தனர். கொடும் வறுமையும் அத்துடன் பெருகிற்று. தேவைக்கதிகமான உழவர்கள், வேலைதேடித் திரிந்தனர். சொந்தத்தில் நிலமில்லை. கரம்புகளைச் செந்நெல் விளையும் வயலாக மாற்றும் ஆற்றலும் ஆர்வமும் உழவர்களுக்கு உண்டு. இருந்தும் என்ன பயன்? உழவனின் வேலையின்மை—வறுமை—பண்ணையாரின் பயிர்ச் செலவை மேலும் மேலும் குறைக்க உதவுகிற பொழுது, புதிய கள்ளிக் காடுகளை கழனியாக மாற்ற முனைவரா? உழவு மாட்டின் விலை-அவைகளுக்கு தினம் வைக்கப்படும் தீனியின் செலவு-ஒரு உழவன் உயிர் வாழ்வதற்குக்கொடுக்கப்படுவதைக் காட்டிலும் கூடுதலாகவன்றோ இருக்கிறது. எனவே உழவர்கள் தொகை கூடுதலாவதும், அவர்கள் வேலை கிடைக்காமல் வேதனைப்படுவதும், பண்ணையாருக்கு, ஒரு வரப்பிரசாதமாகவே தோன்றியது. இதன் பயனாக, உற்பத்தியைப் பெருக்கவும், உழவுக்குத் தகுதியுடையதாக வேறு பூமிகளைத் திருத்தவும், ஆர்வம் தோன்ற வேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது.

உழவனும் கைகால்களைத் தவிர—சொந்தத்தில் வேறு ஒரு சாதனமும் இல்லாத காரணத்தால், கடல் கடந்தவர்கள் போக மீதமுள்ளவர்கள், நிலத்திலே புழுப்போல் நெளிந்த, நிலையில் எவ்வித மாற்றமும் பெறாமல், பண்ணையாரின் மனமகிழ்ச்சியே தாங்கள் உயிரோடு இருப்பதற்கு ஏற்ற உயரிய மார்க்கம் என்று கொண்டு, தலைமுறை தலைமுறையாக நகம் முளைத்த காலமுதலாய், நிலந்திருத்தி, நாற்று நட்டு, நீர்பாய்ச்சி, நெல்லறுத்து, பண்ணையாருக்கு படையல் போட்டு பரவசப்படுத்தி, உயிர் வாழ்ந்து வரலாயினர், இதுநாள்வரை.

சூது அறியார். சுடுசொல் பேசத் தெரியார். எது தேவை—எப்படிப் பெறுவது-எதுவும் அவர்கள் புரிந்து கொண்டிருக்கவில்லை இதுவரையில்' எத்தனை நாளைக்குத்தான்—எவ்வளவு காலத்திற்குத்தான் ஒரே நிலையில் இழிந்த மிருகத்திலும் கீழான நிலையில் காலம் கழித்து வருவர், அந்த வெள்ளை மனத்தினர்?

பெற்ற தாய்தந்தையர்களைப் பிரிந்தபோதும், பிறந்த தாய்நாட்டைத் துறந்தபோதும், உற்றார் உறவினரைத் துரும்பென மதித்து உதறித்தள்ளிச் சென்றபோதும், தங்கள் கதிகண்டு—நீரை ஆறாய்ப் பெருக்கும் தங்கள் கண்களைக்கண்டு-கருத்திலே தெளிவேற்படாது, வெளிநாடு செல்ல வழிகூட்டி அனுப்பிய ஊராளுவோர் உண்மையைத் தெரிந்தபோதும், உழவர்கள் தங்கள் உரிமைகளைத் தெரிந்தும் இருக்கவில்லை; அதனைப்பெற வேண்டிய உறுதி கொள்ளவுமில்லை. இருந்தாலும், என்றுமா ஒரே இருள் சூழ்ந்திருக்கும்? விடிவெள்ளி தோன்றாமல் போய்விடுமா? இருள் விலகிற்று. அறிவொளி பரவிற்று. உரிமைகளை ஓரளவிற்குத் தெரிந்துகொண்டதோடு, அவைகளைப் பெறத்தங்களுக்குள்ள ஆற்றலையும் அறிந்துகொள்ளலாயினர். தூங்கி இருந்த எரிமலை, புகையை வெளிக்குக் காட்ட ஆரம்பித்தது. கனல் கக்கவில்லை. புகையைக் கண்டே, பண்ணையார்கள் கண்களைக் கசக்குகிறார்கள். கடுங்கோபங்கொண்டு, பாராளுவோரின் படைபலம் கொண்டு, பார்திருத்தி, பற்பல தான்யங்களைத் தம் உழைப்பால் உருவாக்கிய உழவர்களை உருக்குலைக்க, உருவான—ஆனால் தகாத—காரியங்களைச் செய்துவருகிறார்கள்.

உழவர்களின் கேவல நிலையையும், பண்ணையார்கள் அவர்களை நடத்தும் கொடுமையையும் சில நாளைக்கு முன், விவசாய சீர்திருத்தக் கமிட்டியின் தலைவர் டாக்டர் குமரப்பா, குறை கூறினதற்கு, எடுத்துக் காட்டினதற்கு, பலருக்கு அறியச் செய்ததற்கு, மிட்டாவும், மிராசும், பத்திரிகைகளிலே போர்தொடுத்து விட்டார்கள். 'ஹிந்து' பத்திரிகையிலே, சாஸ்திரியும் சர்மாவும், ஆச்சாரியும், ஐயங்காரும், 'குமரப்பாவே! பிடி சாபம்' என்னும் போக்கிலே, ஆசிரியருக்கு அன்புக் கடிதங்கள் எழுதிவிட்டார்கள். முதலியாரும் மூப்பனாரும், அந்தப்பட்டியிலே இருந்ததை நாம் மறைக்கத் தேவை இல்லை.

டாக்டர் குமரப்பா, கிசான் சங்கத்தின் அங்கத்தினர் அல்ல. மாஸ்கோ மணம், அவருக்குப்பிடித்தமான நறுமணமன்று இருந்தாலும், இடித்துக்கூறினார் மிராஸ்தாரர்களின் கேவல் போக்கை. படம் பிடித்துக் காட்டினார், பாட்டாளியின் பரிதாப நிலையை. பேசலாம்; அறிக்கை வெளியிடலாம்; புத்தகமும் எழுதலாம், டாக்டர் குமரப்பாவால் அவ்வளவுதான் முடியும். நினைத்ததை நிறைவேற்ற அவரால் முடியாது. நிலங்களை உழவர்களுக்கு உரிமையாக்க, அதற்கான — ஆசை அவருக்கிருந்தாலும் — அதிகாரம், அவருக்குக் கிடையாது. அதிகாரமுடையவர்களை ஆட்டிப்படைக்கும், அதட்டிக் கேட்கும், அந்தஸ்தும் அவரிடம் இல்லை.

ஒரே உத்தரவில், உட்கார்ந்த இடத்திலிருந்தே, உழவர்களுக்கு உரிமைகள் அனைத்தையும் உரிமையாக்கும் உரிமை கொண்டிருப்பவர்கள், அறிக்கை வெளியிட்டுக் கொண்டு இருப்பதென்றால், அவர்கள் நடத்தையில் சந்தேகம் தோன்றுவது நியாயமாகத்தானே இருக்க முடியும்? உள்ளமும் உதடும் வெவ்வேறாக இருக்கிறது அவர்களுக்கு என்று எவராவது முணுமுணுத்தால், 'பேசாதே' என்று தடைவிதித்து, மீறிப்பேசினால் தடியடிப் பயிற்சி நடத்தி, ஒருவர் இருவரை சிறையில் தள்ளி, நாட்டில் உள்ள துன்பத்தைத் துடைத்துவிட்டதாகத் திருப்தி அடைந்து, அதிகாரம் தேடித்தந்த அந்தஸ்தை அனுபவித்துக் கொண்டு, உல்லாசபுரியில் ஒய்யாரமாகக் காலம் கழித்துக்கொண்டிருக்கும் வேளையில், ஒருகணமாவது, தன்நெஞ்சே தனது கரவைத் தன் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்திக் கொடுமைப் படுத்துமே என்ற உண்மையையும் இவர்கள் மறந்து விடுகிறார்கள். எவ்வளவு நெஞ்சழுத்தம் இவர்களுக்கு?

2-ம் பக்கம் பார்க்க

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.